
நாவாந்துறைப் படிப்பகம்

*Registered as a Newspaper in Srilanka*

விலை ரூபா: 15.00

# வலம்புரி

Valampurii




பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 20 வெள்ளிக்கிழமை (05.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 351

# போர் நிறுத்தத்தை வலியுறுத்த முகர்ஜி இலங்கைக்கு வருகிறார்

(புதுடில்லி)

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்துவதற்காக வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி வைக்க இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார். இந்நிலையில் அவர் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளார். இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்துமாறு கோரி புதுடில்லிக்குச் சென்ற தமிழக அனைத்துக் கட்சி தலைவர்களிடம் பிரதமர் மன்மோகன் சிங் இவ் உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



## பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை-திருகோணமலைக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும் என இராணுவ யாழ். சிவில் நிர்வாக அலுவலகர் மேஜர் பெரேரா தெரிவித்தார்.

நேற்று மாலை திருகோணமலையிலிருந்து பயணிகளுடன் காங்கேசன்துறைக்கு கப்பல் புறப்பட இருப்பதாக தமக்கு அறிவிக்கப்பட்டதாகவும் இதனடிப்படையில் இன்று காங்கேசன்துறையிலிருந்து பயணிகள் கப்பல் புறப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

## ஆயுதங்களைக் கைவிட்டால் புலிகளுடன் போர் நிறுத்தம்

### மகிந்த–மன்மோகன் இணக்கப்பாடாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தாமாகவே ஆயுதங்களை கைவிட்டால் போர் நிறுத்தம் ஒன்றுக்குச் செல்வதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வடக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகளை அரசாங்கம் ஒருபோதும் நிறுத்தாது என ஜனாதிபதி இந்தியப் பிரதமருக்கு உறுதியாக கூறிவிட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வங்கக் கடலில் மீண்டும் குறைந்த காற்றழுத்தம்

### வடக்கில் மழை பெய்யலாம்

(யாழ்ப்பாணம்)

மத்திய வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தாழமுக்கம் சுழல் காற்றாக மாறக்கூடிய வாய்ப்பு இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று மாலை மட்டக்களப்பிலிருந்து 750 கிலோமீற்றர் கிழக்குத் திசையில் நிலைகொண்டிருந்த இந்த தாழமுக்கம் வடக்கு, வடமத்திய மாகாணங்களூடாக இன்று கடந்து செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் வடக்கு கிழக்குப் பகுதியில் காற்றுடன் கூடிய மழை பெய்யக் கூடும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை வங்கக் கடலில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமரைச் சந்தித்தாலும் யுத்தத்தை அரசு நிறுத்தாது

### அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(சென்னை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை அரசாங்கம் ஒருபோதும் நிறுத்தாது என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் மூத்த அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங்கை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடளுமன்ற உறுப்பினர்கள் சந்திக்கவுள்ளதாக வெளியான செய்திகள் தொடர்பாக கொழும்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது இவ்வாறு

(12ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தத்துக்கு தயாரில்லை எந்த சவாலை சந்திக்கவும் தயார்

### சபையில் பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்தம் செய்வதற்கு நாம் தயாரில்லை. அதற்காக எந்தச் சவாலையும் எதிர்கொள்வதற்கு நாம் தயாராகவுள்ளோம். புலிகளுடன் போர் நிறுத்தம் செய்யுமாறு எமக்கு கடும் அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன எனினும் அதற்குள் நாம் சிக்கிக் கொள்ள மாட்டோம் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

13-வது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் பயங்கரவாதத்தை நாம் முழுமையாக அழித்ததன் பின்னர் சகலரும் ஒன்றாக அமர்ந்து பேசுவோம் என்றும் அவர் சொன்னார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற அவசரகால சட்டம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு குழுநிலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு விரைவில் சாதகமான தீர்வு வரும்



### கலைஞர் கருணாநிதி நம்பிக்கை

(புதுடில்லி)

இலங்கை தமிழர் பிரச்சினையில் விரைவில் சாதகமான தீர்வு வரும் என்று எதிர்பார்ப்பதாக முதலமைச்சர் கருணாநிதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரை நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தமிழகத்தைச் சேர்ந்த சர்வகட்சித் தலைவர்களுடன் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று நேரில் சந்தித்து வலியுறுத்திய பின் செய்தியாளர்களுக்கு முதல்வர் கருணாநிதி அளித்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆரோக்கியமான வாழ்விற்கு அவசியமானது பாதுகாப்பான குடிநீர்

நீரைச் சுத்திகரிக்கும் முறைகள்.

☆ நீரை நன்றாக கொதிக்க வைத்து ஆறவைத்துப் பருகுதல்.

☆ சோடிஸ் முறை.

சூரியஒளி புகக்கூடிய நிறமற்ற பிளாஸ்ரிக் போத்தல்களில் நீரை நிரப்பி 6 மணித்தியாலங்கள் சூரியஒளியில் கறுப்பு அல்லது ஒளி தெறிக்கக் கூடிய மேற்பரப்பில் வைத்தல்.

☆ நீரை சுத்திகரிக்கும் வில்லைகள் மூலம் சுத்திகரித்தல்.

தெளிந்த நீரை கொள்கலனொன்றில் எடுத்து 5 லீற்றர் நீருக்கு ஒரு சுத்திகரிப்பு வில்லை என்ற வீதத்தில் வில்லைகளையிட்டு 30 நிமிடங்களின் பின் குடிக்க அல்லது சமைக்கப் பாவிக்கலாம்.

உங்களுக்குத் தேவையான நீரைச் சுத்திகரிக்கும் வில்லைகளை உங்களது பகுதி பொது சுகாதாரப் பரிசோதகரிடம் அல்லது குடும்பநல உத்தியோகத்தரிடம் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

சுகாதாரத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

அனுசரணை
care
CARE International

(C-1814)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவம் உதவி



இடம் பெயர்ந்த மக்களுக்கு இராணுவத்தினரால் சமைத்த உணவு வழங்கப்படுகிறது.



தீவுப் பகுதி மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்காக இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படகுச் சேவை.

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கையடுத்து பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு உடனடியாகவே நிவாரணப் பணிகளை மேற்கொண்ட இராணுவத்தினர் பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றனர். வெள்ளம் காரணமாக குருநகர் மற்றும் பாசையூர் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றமை, அவர்களுக்குத் தேவையான உணவை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக சிவில் நிறுவனங்களது ஒத்துழைப்பைப் பெற்று, சமைத்த உணவுகளை பெற்றுக்கொடுப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கையானது யாழ்.மக்களின் பாராட்டுக்கு உரித்தானது.

பாரிய மரங்கள் வேருடன் சாய்ந்து பாதைக்கு குறுக்காக விழுந்திருந்தமையினால் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படுவதையும் மின்சாரம் தடைப்படுவதையும் கருத்தில் கொண்டு அன்றைய இரவே இராணுவத்தினரால் மரங்கள் வெட்டப்பட்டு அப்புறப் படுத்தப்பட்டன.

அத்துடன் வெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவுப் பொருள்களையும் உடுபுடைவைகளையும் தம்மால் இயன்றவரை வழங்கியமையும் யாழ்.மக்கள் நன்றியுடன் பாராட்டினர்.

மேலும் வெள்ளம் காரணமாக தமது வீடுகளை விட்டு வெளியேறி தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு இராணுவத்தினர் தமது உணவின் ஒரு பங்கை வழங்கி வருவதுடன் மருத்துவ முகாம்களையும் நடத்தி வருகின்றனர்.

அத்துடன் பண்ணையில் இருந்து ஊர்காவற்துறை வரையிலான வீதி போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் இருப்பதால் இராணுவ பொறியியல் பிரிவு அதனை சீரமைக்கும் பணியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து ஈடுபட்டுள்ளதுடன் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தற்போது படகுச்சேவை யொன்றை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது.

தொடர்ந்து மூன்று நாட்களாக அதாவது 25,26,27 ஆகிய தினங்களில் பெய்த கடும் மழையினால் இராணுவ முகாம்களும் காவலரண்களும் வெள்ளத்தில் மூழ்கி இராணுவ அங்கத்தவர்கள் பெரும் இக்கட்டான நிலையில் இருந்தபோது தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளைக் கருத்தில் கொள்ளாது அர்ப்பணிப்புடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்ற முன்வந்தமை பற்றியும் இவ்வாறான இயற்கை அனர்த்தங்களின் போது இராணுவத்தினர் பொது மக்களுடன் துணையாக இருந்தது பற்றியும் இடம் பெயர்ந்த மக்கள் தமது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்தனர்.

## வெள்ள நீர் வற்றாததால் தொற்று நோய் அபாயம்

(யாழ்ப்பாணம்)

நந்தாவில் வெள்ள வாய்க்கால் திருத்தப்படாததால் அப்பகுதியிலுள்ள வெள்ளம் வற்றாது காணப்படுகிறது. இதனால் தொற்று நோய் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் அச்சம் வெளியிட்டுள்ள நிலையில், கடந்த வாரம் பெய்த கடும் மழை காரணமாக நந்தாவில் பகுதியில் வெள்ளத்தால் வீடுகள் பலமூழ்கியுள்ளன.

ஒரு வாரம் கடந்த நிலையிலும் அப்பகுதியில் வெள்ளம் வற்றாததால் மக்கள் மீளவும் தமது வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் தொற்று நோய் ஏற்படும் அபாயமும் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். எனவே நந்தாவில் வெள்ள வாய்க்காலை சீரமைத்து அப்பகுதியில் காணப்படும் நீரை வெளியேற்றுவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## யாழ்ப்பாண நிலைமைகள் குறித்து

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகாந்தா அமைச்சர் பதியுதீனுக்கு விளக்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் வெள்ளம் மற்றும் கடும் காற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக் கான நிவாரண நிதியை அதிகரிக்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகாந்தா, அனர்த்த நிவாரண மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று அமைச்சர் ரிசாத் பதியுதீனைச் சந்தித்து இவ்வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

வெள்ளம் மற்றும் கடும் காற்றினால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக விளக்கிய சிறி காந்தா எம்.பி., அமைச்சர் ரிசாத் பதியுதீனை யாழ்ப்பாணத்திற்குச் சென்று இழப்புகள் குறித்து பார்வையிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தான் விரைவில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொற்றுநோய் அபாயம் காணப்படுவதால் அது குறித்தும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சிறிகாந்தா எம்.பி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

## அடுத்துவரும் இரு வாரங்களில் தொலைபேசிச் சேவை சீரடையும்

## ரெலிக்கொம் வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் செயலிழந்துள்ள தொலைபேசிச் சேவைகள் எதிர்வரும் இரு வாரங்களில் சீரடைந்து விடும் என ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் நிகழ்ந்த நிஷா அனர்த்தத்தினால் சுமார் ஆயிரத்து 500தொலை பேசிகள் செயற்பட முடியாத நிலையில் உள்ளன.

ரெலிக்கொம் பணியாளர்கள் 8 குழுக்களாக பிரிக்கப்பட்டு இவற்றை திருத்தும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். இந் நிலையில் எதிர்வரும் இரு வாரங்களில் அனைத்து தொலைபேசிகளும் செயற்பட தொடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச—ஓ)

## வலி. மேற்குப் பகுதிக்கு 5 கிராம அலுவலர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்கு புதிதாக 5 கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு;

என்.சிவரூபன் (சுழிபுரம் மத்தி,சுழிபுரம்), வி.எஸ்.அசோகரத்தினம் (டச்றோட்,மூளாய், சுழிபுரம்), எஸ்.சிவகுமார் (மூளாய் தெற்கு, சுழிபுரம்), ரி.சுபேஸ் (அராலி வீதி, சங்கானை), பி.பிரதீபா (வழக்கம்பரை,தொல்புரம்).

புதிதாக நியமனம் பெறவுள்ள கிராம அலுவலர்களுக்கான பயிற்சிநெறி, யாழ்.மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் 01.12.2008ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. எனவே மேற்குறிப்பிடப்பட்டவர்கள் இப்பயிற்சி நெறிக்கு உடனடியாகச் சமுகமளிக்குமாறு அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## இலவச பாடநூல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலய பாடசாலைகளுக்குரிய இலவச பாடநூல்கள் நாளை சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் விநியோகிக்கப்படும் எனவும் சகல பாடசாலை அதிபர்களும் அன்றைய தினம் பெற்றுக் கொள்ளுமாறும் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ)

## வானிலை அவதான நிலையத்துக்கு தொலைநகல் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு வானிலை அவதான நிலையத்தில் இருந்து எழுத்து மூலம் உடனுக்குடன் செய்திகள், அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக வானிலை அவதான நிலையத்தின் யாழ்ப்பாண உப அலுவலகத்திற்கு நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தினால் தொலைநகல் இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா-2008 நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (ச-3)

## குருப் பெயர்ச்சியை முன்னிட்டு மகாயாகம்

(மட்டுவில்)

மட்டுவில் தெற்கு கல்வம் சிவனாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை குருப்பெயர்ச்சியை முன்னிட்டும் நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ வேண்டுமென்றும் மக்கள் சுபீட்சமாக வாழ வேண்டுமென வேண்டியும் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பிரதம குரு ஜகந்நாத குருக்களால் மகாயாகம் நடத்தப்பட உள்ளது. (ஓ)

ஸ்ரீராம ஜெயம்

அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சனேயர் கோயில் இணுவில், மருதனார்மடம்.

வியாழ மாற்ற விஷேட ஹோமம்

06.12.2008 சனிக்கிழமை - காலை 9.00 மணி :-

சங்கற்பம், கும்பபூஜை, திரவிய அபிஷேகம், ஹோமம், பிரார்த்தனை

பங்குபற்ற விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் ரூபா இருநூறு செலுத்தி தங்கள் பெயர் நக்ஷத்திரங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பூஜா பரிகாரத்தில் இணைய வேண்டிய நக்ஷத்திரகாராதிபதிகள்

| | |
|---|---|
| 3-வது ராசி :- | விருச்சிகம் - விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை. |
| 4-வது ராசி :- | துலாம்-சித்திரை 3-ம், 4-ம் கால், சுவாதி, விசாகம் 1-ம், 2-ம், 3-ம் கால் |
| 6-வது ராசி:- | சிம்மம்-மகம், பூரம், உத்தரம் 1-ம் கால். |
| 8-வது ராசி:- | மிருகசீரிடம்-3-ம், 4-ம் கால், திருவாதிரை,புனர்பூசம் 1-ம், 2-ம்,3-ம் கால். |
| 10 -வது ராசி :- | மேடம் - அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால் |
| 12 -வது ராசி :- | கும்பராசி -அவிட்டம் 3-ம், 4-ம் கால் சதயம், பூரட்டாதி 1-ம் , 2-ம் , 3-ம் கால். |

அனைவரும் வருக ! குரு அருள் பெறுக.

மருதனார்மடம்
25.11.2008

இங்ஙனம்,
ஆதீனகர்த்தா.

(1932)

சைவசமய விவகாரக் குழுவினது முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் 06.12.2008 ஆம் திகதி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சமய அறிவுப் பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் இடம்பெற ஏற்பாடாகியுள்ள சமய அறிவுப் பரீட்சையின் 12ஆம் மற்றும் 13ஆம் தரங்களைச் சேர்ந்த மாணவர்களது பரீட்சை 07.12.2008ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். ஏனைய தரங்களுக்கான பரீட்சைகள் திட்டமிட்டவாறு 06.12.2008ஆம் திகதி நடைபெறும்.

06.12.2008ஆம் திகதியன்று 12,13ஆம் தரங்களைச் சேர்ந்த மாணவர்கள் தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தினால் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகவே மேற்படி திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சிரமங்களுக்காக வருந்துகின்றோம்.

மு.செ.சரவணபவ
தலைவர்
சைவசமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(c-1823)

# இன்று ஒரு தகவல்

## மனமும் சிந்தனையும்

ஒருவரைப் பார்த்து "உன்னுடைய நண்பர்கள் யார்?" என்று கேட்டுப்பாருங்கள்.

கொஞ்ச நேரம் யோசித்துப் பதில் சொல்லுவார். அவரிடமே "உன்னுடைய எதிரிகள் யார்" என்று கேளுங்கள் கடகடவென்று ஒப்பிப்பார்.

நமது மனம் நண்பர்களை விட எதிரிகளை நன்றாக நினைவில் வைத்திருக்கும் இது ஒரு ஆச்சரியமான உண்மை.

உங்களால் நண்பர்களை மறந்துவிட முடியும். ஆனால் எதிரிகளை மறந்து விட முடியாது.

இது ஒரு வேடிக்கை யான நிலைதான்.

அழகான தருணங்களை மறந்து விடுகிறோம். நமது மனம் மலர்களை விட முட்களைத்தான் கவனிக்கிறது.

தன்னைக் காயப்படுத்தும் எதையும் அது உடனே கண்டு கொள்கிறது.

ஒரு தெளிந்த சிந்தனையுடைய மனம் மிக அழகாக உள்ள ஏல்லாவற்றையும் கவனிக்கும். தான் நன்றியுடன் உணரக்கூடிய எல்லாவற்றையும் பார்த்து குறித்துக்கொள்ளும். இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை இயல்பாகவே நன்றாக அமையும்.

மனதில் உள்ள ஒரு சிறிய அமைப்பை மாற்றுவதைப் பொறுத்துத்தான் இந்த விஷயம்- என்கிறார் ஓஷோ.

ஒரு யூதக்கோயில் இருந்ததாம் அது யூதர்களின் மடமாகவும் இருந்தது. அந்தக் கோயிலின் தலைமைக்குரு மிகவும் கண்டிப்பானவர்.

இந்த கோவிலை ஒட்டி ஒரு தோட்டமும் இருந்தது. அதில் இரண்டு யூதர்கள் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். காலையில் ஒரு மணி நேரம், மாலையில் ஒரு மணி நேரம் அவர்கள் நடக்க அனுமதி உண்டு. மற்ற நேரங்களில் மதப் புத்தகங்களை படிக்க வேண்டும். பிற விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

அந்த இரண்டு பேரும் தொடர்ந்து புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள். ஆனால் கோயில் மடத்தில் இருக்கும் போது அவர்கள் புகை பிடிக்க முடியாது. அது கடுமையான குற்றம்.

சரி ... நாம் தோட்டத்தில் இருக்கும் போதாவது புகை பிடிக்கலாமா? என்று அவர்கள் இருவருக்குமே ஒரு ஆசை. இருந்தாலும் இப்படிக்கேட்டால் மதகுரு என்ன சொல்வாரோ என்ற பயம்.

ஒரு நாள் அந்த இருவரில் ஒருவன் கலங்கிப்போய் தோட்டத்திற்குப் போய்க்கொண்டிருந்தான். அங்கே மற்றவன் ஆனந்தமாக புகைப்பிடித்துக்கொண்டிருந்தான். அதைப் பார்த்ததும் இவனுக்கு அதிர்ச்சி!

"என்ன இது நீ கேட்காமலேயே ஆரம்பித்துவிட்டாயா?" என்றான். "இல்லை நான் கேட்டேன்" என்றான் அவன். "நான் கேட்க என்னை கன்னா பின்னாவென்று திட்டி புகைப் பிடிக்க வேண்டும் என்றால் நரகத்திற்கு போ என்று சொல்லி விட்டார். உன்னை எப்படி அனுமதித்தார்?" என்று கேட்டான் இவன்.

அவன் சிரித்துக்கொண்டே, "நீ எப்படிக் கேட்டாய் சொல்!" என்றான்.

"ஜெபம் சொல்லும் போது புகை பிடிக்கலாமா? என்று கேட்டேன் சத்தம் போட்டு அடிக்கவே வந்துவிட்டார்" என்றான் இவன்.

"நான் வேற மாதிரிக் கேட்டேன். ஐயா, புகை பிடிக்கும் போது ஜெபிக்கலாமா? என்று கேட்டேன். அதில் தவறேதும் இல்லை என்று பதில் சொன்னார்" என்றான்.

ஒரு சிறிய மாற்றம் தான்... அது மிகப்பெரிய மாறுதலை ஏற்படுத்தி விட்டது. மனம் நல்ல விதமாக சிந்திக்க ஆரம்பித்தால் மகிழ்ச்சிக்கு பஞ்சம் இருக்காது.

ஒரு கஞ்சன் ஆற்றில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தான். கரையில் நின்ற ஒருவர் "உன் கையைத்தா பிடித்து இழுத்து கரையில் விடுகிறேன்" என்றார். எதையும் கொடுத்து பழக்கம் இல்லாத அவன் கையையும் கொடுக்க மாட்டேன் என்றான்.

இவர் பார்த்தார். உன் கையை கொடு என்று சொல்வதற்குப் பதிலாக நான் என் கையை கொடுக்கிறேன் பிடித்துக்கொள்! என்றார்.

'கப்' என்று பிடித்துக்கொண்டான். இழுத்து கரையில் விட்டு விட்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சாதாரண தர விடைத்தாள் திருத்த 25 ஆயிரம் ஆசிரியர்கள் விண்ணப்பம்

## கல்வி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட இம்முறை 25ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட இம்முறை 25ஆயிரம் ஆசிரியர்கள் விண்ணப்பித்துள்ள போதிலும் 15 ஆயிரம் ஆசிரியர்களே தேவைப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

எனவே விடைத்தாள் திருத் தும் பணிகள் இம்முறை சீராக இடம் பெறும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

புதிய கல்வித் திட்டம் பழைய கல்வித் திட்டம் என இரண்டு கட்டங்களாக விடைத்தாள் திருத்தும் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ள தால் கூடுதலான ஆசிரியர்கள் தேவைப் பட மாட்டாது எனக் கூறினார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடு விரைவில் தீர்க்கப்படும் என்றும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் சிபாரிசை எதிர் பார்த்திருப்பதாகவும் அது தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து சம்பள ஆணைக்குழுவின் சிபாரிசை எதிர்பார்த்திருப்பதாகவும் அது கிடைத்தவுடன் அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்க உள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்தார். (ஒ-5)

# பாடநூல் கிடைக்காதவர்கள் உடன் அறிவிக்கவும்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தகவல்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான அடுத்த வருடத்திற்கான பாடநூல்களை இம் முறை நேர காலத்துடன் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அதன்படி அந்த நடவடிக்கைகள் நாளையுடன் பூர்த்தி அடைந்துவிடும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், யாழ்ப்பாணப்பிரதேசத்திற்கான புத்தகங்களில் பெரும்பாலனவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை 19 இலட்சத்து 31ஆயிரம் பாடப் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இன்னும் 10ஆயிரத்து 671 புத்தகங்களே யாழ். பிர தேசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வுள்ளன.

இன்றைய தினத்தை கல்வி அமைச்சு நூல் விநியோக தினமாகபிரகடனப்படுத்தியுள்ளது.

அதன் படி பாடசாலைகள் மாணவர்களுக்கு அடுத்தவருடத்திற்கான இலவச பாடநூல்கள் இன்று உத்தியோகப்பூர்வமாக விநியோகிக்கப்படவுள்ளன.

தேசிய வைபவம் நுகேகொட ஜனாதிபதி மகளிர் வித்தியாலயத்தில் இன்று காலை 8.30 ற்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. இதுவரை 98 வீதமான புத்தகங்கள் விநியோக மத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகை நாளை அனுப்பி வைக்கப்படும் என கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

இம்முறை 26.3 மில்லியன் புத்தகங்கள் தேவைப்படுகின்றன. அவற்றில் 25.8 மில்லியன் புத்தகங்கள் விநியோகம் மத்திய நிலை யங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

352 வகையான புத்தகங்களை உள்ளடக்கி 26.3 மில்லியன் நூல்களை அச்சிட 2700 மில்லியன் ரூபா செலவாகியுள்ள தாக கல்வி அமைசசர் சுசில் பிரேம ஜயந்த மேலும் தெரிவித்தார்.

பாடநூல்கள் கிடைக்காதவர்கள் அது குறித்து கல்வி அமைச்சின் நூல் வெளியீட்டுத் திணைக்களத்திற்கு அறிவித்தால் அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ அல்லது தொலைநகல் ஊடாகவோ அறிவிக்க முடியும் எனவும் கூறினார்.

தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கங்கள் பின்வருமாறு, தொலைபேசி இலக்கம்:-0112785 306, 0602084792,069208 4638,

தொலைநகல் இலக்கம்:-011 2784815,011 27 85306. (ஓ-6)

# இராசி பலன்

05.12.2008
(கார்த்திகை 20 ,வெள்ளிக்கிழமை)
சதயம் முன்னிரவு 10.34 மணிவரை
ஸப்தமி முற்பகல் 10.00 மணிவரை
இராகுகாலம் 10.47-12.17 மணிவரை
சுபநேரம் 6.17-07.47 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | குடும்ப மகிழ்ச்சி, சுபநிகழ்வு, தொழில் நன்மை,கீர்த்தி. |
| இடபம் | அதிக பிரயாசை,நல்ல செய்தி, கல்வியில் ஆர்வம்,போசன சுகம். |
| மிதுனம் | புதியதிட்டமிடல் ,கட்டுப்பாடு , காரிய தாமதம், பிரயாணம். |
| கடகம் | அபகீர்த்தி, காரியதடங்கல், கலகம், உடல்நலக்குறைவு |
| சிங்கம் | எடுத்தகாரியம் கைகூடும், பொருள் சேர்க்கை , குடும்ப மகிழ்ச்சி , நல்ல செய்தி. |
| கன்னி | தேக நலன் , பிறர் உதவி , காரிய அனுகூலம் , பேசன சுகம். |
| துலாம் | வியாபார நன்மை , முயற்சி தாமதம் , ரோக நிலை , பணவிரயம். |
| விருச்சிகம் | மரியாதைக்குறைவு , தாய்வழி உறவு ,சுபசெலவு ,முயற்சிகைகூடும். |
| தனுசு | கூட்டுமுயற்சி , போசன சுகம் , பிரயாணம் , நண்பர்கள் உதவி. |
| மகரம் | பண விரயம், காரிய தடங்கல் , உடல் நலக்குறைவு , கோபப்படுதல். |
| கும்பம் | சிந்தனை மிகுதி, போசன சுகம், காரிய தாமதம் , பொருள் சேர்க்கை |
| மீனம் | காரிய அலைச்சல், பணவிரயம், சயனசுகக்குறைவு, வீண் பகை. |

வளவன்

# கட்டாயக் கல்விக்கான வயதெல்லை 16 ஆக உயர்வு

(கொழும்பு)

சிறுவர்கள் கட்டாயமாக கல்வி கற்க வேண்டிய வயதெல்லை 16 ஆக உயர்த்தப்பட்டுள் ளது. இதுவரையில் இந்த வயதெல்லை 14 ஆக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு குழந்தைக்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரையில் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கில் அரசாங்கம் இந் தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. கட்டாயக் கல்வி தொடர்பான சட்ட மூலத்தில் திருத்தங் களை மேற்கொள்வது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன் னிட்டு கொழும்பில் நடை பெற்ற நிகழ் வொன் றில் கலந்து கொண்ட கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (ஓ-6-5)

# சர்வதேச புனர்வாழ்வு அமைப்பின் உயர் பதவிக்கு இலங்கையர் தெரிவு

(கொழும்பு)

200 நாடுகள் அங்கம் வகிக்கும் சர்வதேச புனர்வாழ்வு அமைப்பின் உயர் பதவியொன் றுக்கு இலங்கையைச் சேர்ந்த எஸ்.டபிள்யூ. ஜயவர்தன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச புனர்வாழ்வு அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்திய பிரதித் தலைவராக ஜயவர் தன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஊனமுற்றோர் பேரவையின் தலைவராக வும்,சர்வதேச புனர்வாழ்வு அமைப்பின் இலங் கைக் கிளையின் செயலாளராகவும் ஜயவர்த் தன கடமையாற்றி வருகின்றார்.

கனடாவின் கியூபிக் நகரில் அண்மை யில் நடைபெற்ற வாக் கெடுப்பின் போது ஏகம னதாக ஜயவர்தன ஆசிய பசுபிக் பிராந்திய பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டார். (ஓ-5,6)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர்தலுக்கான சர்வதேச (ஐ.ஓ.எம்) நிறுவனத்தினரால், உரிய பிரதேச செயலகங்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ''பாதுகாப்பான புலம்பெயர்வு'' என்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்த ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 8 ஆம் திகதி சங்கானை, 9 ஆம்திகதி தெல்லிப்பளை, 11ஆம் திகதி கரவெட்டி,12ஆம்திகதி சாவகச்சேரி,13 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களிலும் 10 ஆம் திகதி சிறுப்பிட்டி கிழக்கு GTZ பொது மண்டபத்திலும், காலை 9மணி முதல் மாலை 3.30 மணிவரை கருத்தரங்கு நடைபெறுமென ஐ.ஓ.எம். நிறுவனத்தின் யாழ். அலுவலகத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஓ)

## பருத்தித்துறை -கச்சேரி போக்குவரத்துச் சேவை

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை பிரிவில் கடந்த இரு மாத காலமாக ஏற்பட்டிருந்த பேருந்துகளுக்கான உதிரிப்பாகத் தட்டுப்பாடு காரணமாக கச்சேரி ஊடான 750 இலக்க பேருந்து சேவை தடைப்படும் நிலை ஏற்பட்டபோது காரைநகர் பிரிவிற்குரிய பேருந்துகளை 750 வழியில் மாற்றி கச்சேரியூடாக சேவையில் ஈடுபடுத்தப் பட்டது.

இதற்கு உதவிய யாழ்.மாவட்ட அரச அதிபர், காரைநகர் சாலை முகாமையாளர், மற்றும் உரிய நேரத்தில் தம்மைக் கடமைக்கு சமுகமளிக்க கைகொடுத்து உதவிய சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு இவ் வழியில் தினமும் பயணிக்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்களும் ஏனையோரும் தமது உளப் பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றனர். (ஓ)

## தேசிய கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகளை பார்வையிட புதிய இணையத்தள சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் உள்ளகப் பயிற்சியை மேற்கொண்ட 7ஆம் அணி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான கல்வி டிப்ளோமா சான்றிதழ் வழங்கல் நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

அத்துடன் கல்லூரியின் இணையத்தளம் உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களின் அனுசரணையின் மூலம் www.jncoe.net எனும் முகவரியில் வைபவ ரீதியாக பீடாதிபதி எஸ். கே. யோகநாதனால் திறந்து வைக்கப்பட்டது. அங்கு பீடாதிபதி உரையாற்றிய போது தொழில்நுட்பத் தகவல் உலகின் புத்தகங்களாக வெளிவருவதை விட இவ்வாறான இணையத்தளம் மூலமாக விடயங்கள் பரிமாற்றம் செய்யப்படுதல் சகலருக்கும் நன்மை பயப்பதாகவும் விரைவானதாகவும் இருக்க முடியும்.

இவ்வகையில் எமது கல்லூரியின் ஆசிரிய மாணவர்களின் மற்றும் விரிவுரையாளர்களின் ஆக்கங்கள் அனைத்து ஆசிரியர்களுக்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கும் என நம்புகின்றேன் எனவும் இத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் செயற்பாடுகளை உடனுக்குடன் பார்வையிடவும் முடியும் எனவும் குறிப்பிட்டார். (ஓ)

# அராலி -வேலணை பாதையினை புனரமைக்குமாறு யாழ்.அரச அதிபரிடம் அவசர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தையும் தீவகத்தையும் இணைக்கும் அராலி-வேலணைப் பாதை உடன் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் ச.செல்வரத்தினம், யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சமாச தலைவர் சி.பொ.வ.ம.கா.முதலியார் ஆகியோர் இணைந்து யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷிடம் அண்மையில் இவ்வாறு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

அவ் அவசர கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, அராலி-வேலணைப் பாதை,பாரிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்3 ஆண்டு திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டு உடன் புனரமைப்புச் செய்யப் பட வேண்டிய கட்டாய தேவை இப்போது எழுந்துள்ளது.

இதேவேளை, அண்மையில் வீசிய 'நிஷா' புயலினால் தீவகத்திற்கான பண்ணை வீதி முற்றாக அழிவடைந்து போக் குவரத்து தடைப்பட்டுள்ளது. இதனால் பண்ணையிலிருந்து மண்டைதீவிற்கான போக்குவரத்து கடல் மார்க்கமாகவே பெரும் சிரமத்துடன் இடம்பெறுகின்றது. இந்நிலையில் அராலி-வேலணைப் பாதை மீள் புனரமைப்புச் செய்யப்பட்டால் பாரிய சிக்கல் நீங்கி, இப் பிரதேச மக்களின் தேவைபூர்த்தி செய்யப்படும். இவ்விடயம் கடந்த காலங்களில் மாவட்ட அரசாங்க அதிபர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட போதும்30 ஆண்டுகளாக இத்திட்டம் பூச்சியமாகவே உள்ளது. மேலும் இப்பாதை விபரம் தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் அவசரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடமாகாணத்திற்கான புனர் வாழ்வு மற்றும் புனர்நிர்மாண பெருந் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.இதற்கான நடவடிக்கையை உள்ளூராட்சி, நிவாரணம், சமூக சேவைகள் அமைச்சின் வடமாகாண செயலர் தி.இராசநாயகம் மேற்கொண்டுள்ளார்.

இத்திட்டம் தொடர்பில் தெரிய வருவதாவது, வடமாகாணத்திற்கான பெருந்திட்டத்தில் துறை சார் நிலைமை பகுப்பாய்வு செய்யப் பட்டு பிரதேச ரீதியான திட்டங்கள் எண்ணக் கரு படிவம் மூலம் தயாரிக்கப்பட்டு முன் மொழியப்பட வேண்டும்.அனைத்துத் துறைகளையும் சேர்ந்த மக்களுடைய சேதமாக்கப் பட்ட, நிர்மூலமாக்கப்பட்ட அனைத்து தொழில் உபகரணங்கள் உள்ளடக்கப்பட்டு.துறைசார் பொருளாதார மற்றும் வாழ்வாதார செயற்பாடுகள் உள்ளடக்கப்படல் அவசியமாகும் .(ஓ-5)

## சாதாரண தர பரீட்சைக்கான அனுமதி அட்டைகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை பரீட்சார்த்திகளின் க.பொ.த.(சா/த) பரீட்சை அனுமதி அட்டைகள் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ளதெனவும் பாடசாலை அதிபர்கள் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ஓ-29)

## தகவல் தொழில்நுட்ப பூங்காவின் கணனி வகுப்புகள் விரைவில்

(கோண்டாவில்)

அண்மையில் பெய்த கடும் மழையினால் யாழ்.தகவல் தொழில்நுட்ப பூங்கா (I.T.Park) பலத்த சேதமடைந்துள்ளது. பூங்காவின் கூரை காற்றினால் தூக்கி வீசப்பட்டதனால் மழைநீர் நேரடியாக உட்சென்று நில விரிப்புக்கள்.கணனி, கணனி உதிரிப்பாகங்கள் ,மேசைகள்.கதிரைகள் எனப் பெறுமதி வாய்ந்த பொருட்கள் மழையில் நனைந்து கடும் சேதமடைந்துள்ளன. சேத விபரங்கள் ஒரு மில்லியனுக்கும் அதிகம் என மதிப்பிடப் பட்டுள்ளது.

இதனால் கணனி வகுப்புக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு கணனிகள் துரித கதியில் திருத்தப்பட்டு வருவதாகவும் கூடிய விரைவில் வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் தகவல் தொழில் நுட்ப பூங்கா இயக்குனர் அரவிந்த் தெரிவித்துள்ளார். (ஓ-36)

## பாடசாலை மாணவருக்குரிய தேசிய அடையாள அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்த்திலுள்ள பாடசாலைகள் மூலம் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகள் மாவட்டச் செயலகத்திற்கு கிடைத்துள்ளன.

பாடசாலை அதிபர்கள், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு டிசம்பர் 5,6,7 ஆம் திகதிகளில் வந்து இவற்றை நேரடியாகப் பெற்றுக்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

## ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தால் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரியவர்களினால் உரிமைகோரப் படாததுமான பொருட்கள் இம்மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை10 மணிக்கு நீதிமன்ற வளவினுள் வைத்து ஏலத்தில் விடப்படுமென நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## சத்யஜித் ரேயின் 'நாயக்' திரைப்படம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புற நிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் கல்விசார் / கலைத்துவம் சார் படக் காட்சித் தொடரில் காட்சிப்படுத்தப் படுகின்ற. உலகின் தலைசிறந்த இந்திய நெறியாளரான சத்யஜித் ரேயின் ஆறு திரைப் படங்களின் வரிசையில் வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அவரின் 'நாயக்' (1966) திரைப்படம் அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக்காட்சியின் இறுதியில் திரைப் படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெறும். ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன் பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ஓ)

## வேலணை வைத்தியசாலைக்கு மருந்துகள் அன்பளிப்பு

வேலணை வைத்தியசாலைக்கு தீவகம் ஊர்காவற்றுறை லயன்ஸ் கழகத்தினால் மருந்துகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. அமொக்சிலின் கூட்டுக்குளிசை, பிறிற்றோன் ஆகிய குளிசைகள் தலா ஆயிரம் வீதம் வழங்கப்பட்டுள்ளன.

வேலணை வைத்தியசாலையில் முக்கிய அன்ரி பயோட்டிக் மருந்துகளுக்கு தட்டுப்பாடு உள்ளதாக வேலணை வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் ஆ. திருநாவுக்கரசு அறிவித்திருந்தார்.

இந்த மருந்துகளை பொது அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் அன்பளிப்புச் செய்யுமிடத்து அதனால் நோயாளர்கள் நன்மை அடைவர் என அவர் வேண்டு கோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)




## கனவு நட்சத்திர இசைப் போட்டி

(நல்லூர்)

யாழ்.நகரில் நடைபெறவுள்ள கைத் தொழில் மற்றும் கல்விக் கண்காட்சியின் ஒரு அங்கமாக நடாத்தப்படவுள்ள கலை கலாசார நிகழ்வுகளில் முக்கிய நிகழ்வாக கனவு நட்சத்திர இசைப் போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்டபட்ட 15-30 வயதுக்கிடைப்பட்ட இசைக் கலைஞர்கள் பங்குபற்றமுடியும். பிரதேச செயலகப் பிரிவிலிருந்து 5 போட்டியாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். பங்குபற்றுபவர்கள் யாழ்ப்பாணத்தை நிரந்தர முகவரியாகக் கொண்டவராக இருப்பதோடு சாஸ்திரிய இசை அல்லது தாமே உருவாக்கிய இசையில் தேர்ச்சிபெற்றவராக இருத்தல் வேண்டும்.

அத்துடன் போட்டியாளர்கள் பாடலுக்கேற்ற ஆடையை அணிந்துகொள்வதோடு குறைந்தபட்சம் மூன்று பாடல்களையேனும் இசைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

இப் போட்டியில் பங்குபற்ற விரும்புவர்கள் தங்களது விபரங்களை இம் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ஓ)

## இசைப் போட்டிக்கான விண்ணப்பம்கோரல்

(கோப்பாய்)

யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ள கைத்தொழில் கல்விக் கண்காட்சியின் ஓர் அங்கமாக கலை கலாசாரப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இதில் முக்கிய நிகழ்வாக நடைபெறவுள்ள இசைப் போட்டிக்கு வலிகிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 15-30 வயதிற்குட்பட்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் இசைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது சுயவிபரத்தை இம் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

போட்டி தொடர்பான மேலதிக விரபங்களை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## இந்து மயானம் புனரமைப்பு செய்யப்பட வேண்டும்

கோண்டாவில் கிழக்கு கொட்டைக்காடு இந்து மயானமும் அதற்கு செல்லும் வீதியும் நீண்டகாலமாக சேதமடைந்துள்ளது.வீதி பற்றைகளால் மூடப்பட்டு ஒற்றையடிப் பாதையாக சுருங்கியுள்ளது. மயானத்தில் கொட்டகை அமைக்கப்படாததனால் மழை காலங்களில் உடல்களை தகனம் செய்வது கடினமாகக் காணப்படுகின்றது. பலதடவைகள் இக் குறைகள் சுட்டிக்காட்டப்பட்டும் அதிகாரிகளோ,மயான பராமரிப்பாளர் சங்கமோ கவனம் செலுத்தவில்லை என பொது மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-36)





யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சேர்.பொன்.இராமநாதனின் குருபூசைத்தின விழா நிகழ்வில் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள சேர். பொன்.இராமநாதனின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பதையும், அதனைத் தொடர்ந்து உரையாற்றுவதையும், பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபைத் தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், ஶ்ரீபரமேஸ்வரன் ஆலய பிரதம குரு சிவஶ்ரீ சோ.இ.பிரணதார்த்திவாரக் குருக்கள், யாழ். பல்கலைக் கழக இந்துமன்ற பெருந்தலைவர் கலாநிதி மா.தேவநாதன், இந்துமன்ற தலைவர் கோ.கோபிராஜ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 3

### தமிழ், தமிள

தமிழர் இனக்குழுவின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆய்வு செய்வதற்குத் தமிழ் என்ற சொல்லும் அச்சொல்லுடன் தொடர்புடைய சொற்களும் ஆதிமூலாதாரங்களில் எவ்வாறு காணப்படுகின்றன என்பதைக் கண்டுகொள்ளல் அவசியமாகும்.

'தமிழ்' என்ற சொல் தமிழ்மொழி மூலாதாரங்களாகிய சங்கநூல்களிலும் தொல்காப்பியம் எனப்படும் இலக்கண நூலிலும் இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் காணப்படுகின்றது. இவற்றில் அச்சொல் ஒரு மொழியையும், ஓர் இனக்குழுவையும் ஒரு நாட்டையும் குறிக்கும் பெயர்களில் அடிச்சொல்லாக அமைகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட தமிழ் மூலாதாரங்களின் காலமளவில், பிராகிருத மொழி மூலாதாரங்களில் 'தமிழ்' என்ற சொல்லின் வழிவந்த, அல்லது அச் சொல்லுடன் உறவுள்ள சொற்கள் காணப்படுகின்றன. பிரசித்தி பெற்ற கலிங்கநாட்டுக் காரவேல மன்னனின் ஹாதிகும்பாக் கல்வெட்டில் வரும் 'த்ரமிர' என்ற பெயரும், ஆந்திரத்தில் அமராவதிக் கல்வெட்டு ஒன்றில் காணப்படும் 'தமிள' என்ற சொல்லும் இரண்டு முக்கிய எடுத்துக்காட்டுகள் எனலாம்.

இதே காலத்தைச் சேர்ந்த ,பாளி மொழியில் உள்ள அகித்தி ஜாதகக் கதையில் 'தமிளரட்டம்' என்ற பெயர் தமிழ் நாடு என்ற பொருளில் வருவதைக் காணலாம். இவ்வாறு கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் 'தமிழ்' என்ற பெயரால் வருணிக்கப்பட்ட ஓர் இனக்குழு இருந்தது என்பதை உறுதிப்படுத் தலாம்.

இலங்கையின் வரலாற்று மூலாதாரங்களாகிய பாளி, சிங்கள நூல்களில் முறையே 'தமிள', 'தெமள' என்ற இனக்குழுப் பெயர்கள் காணப்படுகின்றன. ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளைச் சோந்த சிங்களக் கல்வெட்டுக்களில் 'தெமெள்' என்ற பெயர் காணப்படுகின்றது.

இச் சொற்கள் இக்காலத்தில் சிங்களத்தில் வழங்கும் 'தெமள' (இலக்கிய வழக்கில் 'த்ரவிட') என்ற சொல்லின் முற்பட்ட வடிவங்கள் என்பதையும் இவை அனைத்தும் ஒரே இனக்குழுவை (அதாவது தமிழர் இனக்குழுவை) குறிக்கும் பெயர்கள் என்பதையும் அறிஞர்கள் ஏற்றுள்ளனர்.

இலங்கையில் இப் பெயரின் மிகப் பழைய வடிவமாகக் கிடைப்பது பிராமிக் கல்வெட்டுக்களில் உள்ள 'தமெட' என்ற பிராகிருத வடிவமாகும். இதன் மாற்று வடிவமாக சில கல்வெட்டுக்களில் 'தமெழ' என்ற பெயர் தமிழ் - பிராமிக்குரிய 'ழ' கர எழுத்துடன் காணப்படும். இலங்கையில் ஒரு வேறான இனக்குழுவாக ஆக்கம் பெற்ற தமிழர் இனக்குழுவின் தோற்றம் இப் பழைய 'தமெட' இனக்குழுவுடன் தொடங்குகின்றது.

இலங்கையில் வாழும் சிங்களவர் இனக்குழுவும் தமிழர் இனக்குழுவும் எவ்வாறு தோன்றிப் பரிணாமம் அடைந்தன என்பதை அறிவதற்கான ஆழ்ந்த ஆய்வு எதுவும் அண்மைக்காலம் வரை நடத்தப் படவில்லை.

இலங்கை வரலாற்றை எழுதிய வரலாற்றாசிரியர்கள் இலங்கை வரலாறு தொடங்கிய போது இத் தீவில் வாழ்ந்தோர் சிங்கள மக்கள் என்றும், தமிழரும் பிற இனக் குழுவினரும் பின்னர் வந்தோர் என்றும் கொள்ளும் ஓர் எண்ணக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதியுள்ளனர்.

இவ்வாறு இவர்கள் இலங்கையின் வரலாற்றை இலகுபடுத்தி, அதன் தோற்ற வரலாற்றின் சிக்கல்களை துருவி ஆராய்ந்து தெளிவாக அறியத் தவறியமைக்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பாகத்திலும் எழுதப்பட்ட வரலாறு சார்ந்த படைப்புக்கள் காரணமாய் உள்ளன.

### இலங்கை வரலாற்றெழுத்தியல்

வரலாற்றை ஆய்வு செய்வது வரலாற்றியல் என்றால், வரலாறாக எழுதப்பட்டவற்றை ஆய்வது வரலாற்றெழுத்தியல் (historiography) எனலாம்.

இலங்கையின் ஆதி வரலாற்றை அறிவியல் நோக்குடன் ஆய்வு செய்யும் முயற்சி அண்மைக் காலம் வரை காணப் படவில்லை என்று கூறுவதில் தவறில்லை. காலனித்துவ ஆட்சி இலங்கையில் முடிவுறும் வரை ஆதி வரலாற்று அறிவியல் சார் ஆய்வு புறக்கணிக்கப்பட்டிருந்தது. இத்தகைய நிலை இந்தியாவில் இருக்க வில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி யில் இந்தியாவின் முன்னிலை மாநிலங்க ளில் நவீன பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன.


இதனைத் தொடர்ந்து கற்றறிந்த இந்தியரிடையே இந்தியத் தேசிய உணர்வை வளர்க்கும் இயக்கங்கள் உருவாகின. இவற்றின் விளைவாகத் தங்கள் நாட்டின் வரலாற்றில் இந்தியரிடையே ஆர்வம் தோன்றியது. இந்தியாவின் ஆதிவரலாற்றை அறிவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. அத்தகைய ஆய்வினை முறையாக நடத்துவதற்குப் பல்கலைக்கழகங்கள் உதவின. ஆனால் இலங்கையிலோ பிரித்தானியர் ஆட்சி முடிவடையும் கட்டத்திலே தான் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

இவ்வாறு 1942இல் இலங்கைப் பல்கலைக் கழகம் (University of Ceylon) என்ற பெயரால் ஒரு பல்கலைக்கழகம் அமைக் கப்பட்ட பின்னரே இலங்கை வரலாறு என்பது பல்கலைக்கழக மட்டத்தில் கற்பிக்கப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் கால் வரை இலங்கையின் ஆதிவரலாற்றில் அறிஞர்கள் ஆழ்ந்த அக்கறை

பேராசிரியர்
கா. இந்திரபாலா

கொள்ளவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து சில அறிஞர்கள் இலங்கையின் தொல்கால நகரங்களின் அழிபாடுகளையும் கல்வெட்டுக்களையும் ஆய்வு செய்வதில் ஆர்வம் காட்டினர் என்பதை மறுக்க முடியாது. அதேபோல், இலங்கையின் பாளி மற்றும் சிங்கள வரலாற்று மூலதாரங் களை ஆய்வு செய்வதிலும் சிலர் கவனம் செலுத்தினர். ஆனாலும், ஆதிவரலாற்று அறிவியல் அடிப்படை யில் ஆய்வு செய்யும் முயற்சியில் அவ்வளவு அக்கறைகாட்ப்படவில்லை. (தொடரும்)






யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் நடாத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் தேர்வுச் செயலாளர் இரா. செல்வவடிவேல் உரையாற்றுவதையும், சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன், கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை அதிபர் ச.லலீசன், செயலாளர் இ.தவகோபால் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# சமூக நிறுவனங்களுக்கான நிர்வாகமும் முகாமைத்துவமும் 10

தி.திருசாந்
SOND நிறுவனம்
யாழ்ப்பாணம்

### 3.2 தகவல் முகாமைத்துவமும் தகவல் பகிர்வும்

### 3.2.1 தவகல் முகாமைத்துவம் (Information Management)



தகவல் முகாமைத்துவமானது சமூக மட்ட அமைப்புக்கள் பெருளமவில் கவனம் செலுத்தாத பகுதியாகக் காணப்படுகிறது. ஆனால் இது மிகவும் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டிய அம்சமாகும். ஏனெனில் எந்தவொரு அமைப்பினைப் பற்றியும் ஏனையவர்கள் அறிந்து கொள்வதற்கும் அமைப்பின் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதிலும் நாளாந்தக் கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதிலும் முறையான தகவல் முகாமைத்துவம் முக்கிய பங்கு வகிக்கிறது. சுருக்கமாகச் சொல்வதானால் அமைப்பின் வெற்றியைத் தீர்மானிப்பதில் இதன் பங்கு அளப்பரியது. ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட தகவல் முகாமைத்துவத்தை அமைப்பு பின்பற்றாதவிடத்து அது அமைப்பிற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதுடன் மீண்டும் மீண்டும் தேவையான தகவல்களை சேகரிப்பதற்காக நேரத்தையும் வளங்களையும் வீண் விரயமாக்க நேரிடும்.

சமூக மட்ட அமைப்புக்களைப் பொறுத்த வரையில் தகவல் முகாமைத்துவம் என்பது

1.தேவைாயன தரவுகளைச் சேரிகரித்தல்.

2.பதிவு செய்தல்.

3. தகவல்களைப் பராமரித்தல்.

4.பிந்திய தரவுகைளச் சேர்த்துக் கொள்ளல்.

5. முகாமைத்துவத் தேவைகளுக்கு அவற்றைப் பயன்படுத்தல்.

6.கொடையாளர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் பகிர்ந்து கொள்ளல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

சமூக மட்ட நிறுவனங்கள் பல்வேறு தரவுகள், கோவைகள், ஆவணங்கள் என்பவற்றை ஒழுங்காகப் பராமரிப்பதோடு கிரமமாகப் பிந்திய தகவல்களைச் சேகரித்து தகவல்களைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். ஒரு சமூக அடிப்படை அமைப்பானது ஒழுங்காகத் தயாரித்து பராமரிப்பதோடு கிரமமாகப் புதுப்பிக்க வேண்டிய கோவைகள் மற்றும் ஆவணங்கள் பற்றிய அலுவலக முகாமைத்துவத்தின் கீழ் விபரமாகப் பார்க்கலாம்). மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் தனி ஒருவரினால் செய்யக் கூடியதல்ல. நாம் முன்பு கூறியதைப் போல ஒன்றிற்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் ஒன்று சேர்ந்து குழுவாகச் செயற்படுவது அவசியமாகும்.

### 3.2.2 தகவல் பகிர்வு (Inforamation Sharing)

சமூக மட்ட அமைப்புக்களின் அடிப்படை விபரங்கள் ,செயற்பாடுகள் தொடர்பாடுகள் தரவுகளும் தகவல்களும் ஒழுங்காகச் சேரிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டால் மட்டும் போதாது. அதைவிட முக்கியமானது சரியான முறையில் தகவல் பகிர்வுகளை மேற்கொள்வதாகும். பொதுவாகத் தகவல் பகிர்வு செய்யப்படவேண்டிய விடயங்களும் அதனுடன் தொடர்புபட்டவர்களின் விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

1.அங்கத்தவர் தொடர்பானைவ:- அங்கத்தவர்களாக உள்ளவர்களின் விபரங்களை அறியும் உரிமை அமைப்பின் அனைத்து அங்கத்தவர்களும் உள்ளது. அமைப் பில் தற்போதுள்ள அங்கத்தவர், புதிதாகச் சேர்ந்த அங்கத்தவர், மற்றும் அங்கத்துவம் வர்கள் போன்ற விபரங்களை பொதுக் கூட்டம் போன்றவற்றில் எழுத்து மூலம் அல்லது வாய் மொழி மூலம் அறியத்தரமுடி யும். இல்லைடே யல் பட்டிய லைத் தயாரி த்து அலுவலகத்தில் காட்சிப்படுத்தவும் முடியும்.

2.நிர்வாகக் குழு தொடர்பானவை: தற்போது உள்ள நிர்வாக சபை தொடர்பான விபரங்கள் வெளிநபர்களுடன் பகிர வேண்டிய தேவை உள்ளது.

உதாரணமாக நிதி வழங்கும் அமைப்புக்கள் அமைப்பைச் சட்ட ரீதியாகப் பதியும் நிறுவனங்கள் என்பன இவ் விபரங்களைக் கேட்பது வழக்கம். இவை எழுத்து மூலமோ தலைவரால் அல்லது செயலாளரால் வழங்கப்படும். (தொடரும்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## மாதிரி வினாத்தாள் -06 கணிதம் - II

நேரம் :- 2 மணித்தியாலம்

### பகுதி - A

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
(ஒரு வினாவிற்கு 10 புள்ளிகள் வீதம் மொத்தம் 50 புள்ளிகள் ஆகும்.)

1. ரூ 70000 பெறுமதியான கணனி ஒன்றை ரூ 30000 செலுத்தி மாணவர்கள் பெற்றுக் கொள்ளலாம். கடனுக்கான ஆண்டு வட்டி 24% ஆகும். மேற்படி விளம்பரத்திற்கு அமைய
   (i) கணினியை கொள்வனவு செய்யும் மாணவன் செலுத்த வேண்டிய மீதிக் கடன் பணம் எவ்வளவு?
   (ii) எஞ்சிய பணத்தை 10 சம மாதாந்த தவணைக் கட்டணங்களாக செலுத்த முடியும் எனின் தவணை ஒன்றிற்கான கடன் பணம் எவ்வளவு?
   (iii) மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
   (iv) ஒரு மாதக் கடன் பணத்திற்கான வட்டி யாது?
   (v) மொத்த வட்டி யாது?
   (vi) தவ்ணைக் கட்டணம் ஒன்றின் பெறுமானம் யாது?


2.
a.
(i) $y = 3-(x-2)^2$ என்ற சார்பின் வரைபை வரைவதற்கு கீழ்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| x | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| y | -6 | -1 | ... | .... | 2 | -1 | -6 |

(ii) x, y அச்சுக்களில் 10 சிறிய பிரிவுகளை ஒரு அலகாகக் கொண்டு ஆள்கூற்றுத் தளத்தை வரைந்து அதில் வரைபை வரைக.

b. (i) சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக.
(ii) திரும்பற் புள்ளியின் ஆள்கூற்றை எழுதுக.
(iii) $y = 5-(x-3)^2$ என்ற சார்பின் சமச்சீரச்சின் சமன்பாட்டையும் திரும்பற் புள்ளியின் ஆள்கூற்றையும் உய்த்தறிக.

3. உருவில் O இலுள்ள தொடலி DOC உம் P இலுள்ள தொடலி PL உம் ஆகும். O இனூடாக OAB, OPQ எனும் நேர்கோடுகள் வரையப்பட்டுள்ளன.
   (i) $\hat{COQ}$ இற்கு சமனான இரண்டு கோணங்களைப் பெயரிடுக.
   (ii) $AP // BQ$ எனக் காட்டுக.
   (iii) $\hat{APL}$ இற்கு சமனான இரண்டு கோணங்களைப் பெயரிடுக.
   (iv) நாற்பக்கல் BOPL ஒரு வட்ட நாற்பக்கல் எனக் காட்டுக.
   (v) (i) – (iv) ஆம் வினாவிற்கு நீர் பயன்படுத்திய தேற்றங்களைக் கூறுக.





4. நீச்சல் கழகம் ஒன்றின் அங்கத்தவர்களின் வயது பற்றிய அட்டவணை பின்வருமாறு


| வயது | 0- 9 | 10 -19 | 20-29 | 30-39 | 40-49 | 50 மேல் |
|---|---|---|---|---|---|---|
| அங். எண் | 5 | 15 | x | 30 | 19 | 15 |

   (i) அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை 100 எனின் x இன் பெறுமானத்தைக் காண்க.
   (ii) வகுப்பு ஒன்றின் பருமன் யாது?
   (iii) ஆகார் வகுப்பின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகக் கொண்டு இடை வயதைக் காண்க. (வயதைக் கிட்டிய முழு எண்ணில் தருக)

5. ABCD ஓர் இணைகரம். E, F என்பன முறையே BC, AD என்பவற்றின் நடுப்புள்ளியாகும். மூலை விட்டம் AC ஆனது BF, ED என்பவற்றை G, H இல் சந்திக்கிறது.
   (i) DF = BE எனக் காட்டுக.
   (ii) நாற்பக்கல் BEDF ஓர் இணைகரம் எனக் காட்டுக.
   (iii) AG = GH எனக் காட்டுக.
   (iv) GH = HC எனக் காட்டுக.
   (v) AG = GH = HC எனக் காட்டுக.
   (vi) நீர் பயன்படுத்திய தேற்றத்தைக் கூறுக.




6. 2r ஆரையும் h உயரமும் உடைய கூம்பிலிருந்து r ஆரையுடைய கூம்பு நீக்கப்பட்டு எஞ்சிய பகுதியில் r ஆரையுடைய அரைக்கோளம் குடைந்து எடுக்கப்பட்டது.
   (i) நீக்கப்பட்ட r ஆரையுடைய கூம்பின் உயரத்தை r இல் தருக.
   (ii) பெரிய கூம்பின் கனவளவை $r, \pi$ சார்பில் காண்க.
   (iii) வெட்டி அகற்றப்பட்ட கூம்பின் கனவளவை $r, \pi$ சார்பில் காண்க.
   (iv) அரைக்கோளத்தின் கனவளவை காண்க.
   (v) நிழற்றிய திண்ம உருவின் கனவளவு $\frac{26}{3}\pi r^3$ எனக் காட்டுக.
   (vi) $\pi = 3.14, r = 10.5cm$ எனின் இக்கனவளவின் பெறுமானத்தை மடக்கை அட்டவணையை உபயோகித்துக் காண்க.





### பகுதி – B

ஐந்து வினாக்களுக்கும் மட்டும் விடை தருக.
(ஒரு வினாவிற்கு 10 புள்ளிகள் வீதம் மொத்தம் 50 புள்ளிகள் ஆகும்.)

1. (a) காரணிகளைக் காண்க. $a^2+3a-3-a$
   (b) ஒரு பேனையின் விலை 3 பென்சிலின் விலைக்குச் சமன். ஒரு பேனையினதும், இரண்டு பென்சிலினதும் விலை ரூ 25 ஆகும்.
      1. பேனையின் விலை $x$ பென்சிலின் விலை $y$ எனக்கொண்டு சமன்பாடுகளை அமைக்க.
      2. இச்சமன்பாடுகளை தீர்த்து ஒரு பேனையினதும் ஒரு பென்சிலினதும் விலையைக் காண்க.
   (c) சுருக்குக. $(9)^{\frac{-3}{2}} \times 8^{\frac{1}{3}}$

2. (a) குறித்த வணிகர் கழக கூட்டமொன்றிற்குச் சமூகமளித்த அங்கத்தவர்கள் வைத்துள்ள வங்கிக் கணக்குகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   - இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருப்போர் 30 பேர்
   - மக்கள் வங்கியில் கணக்கு வைத்திருப்போர் 35 பேர்
   - தேசிய சேம்ப்பு வங்கியில் கணக்கு வைத்திருப்போர் 40 பேர்
   - ஏதாவது இரு வங்கிகளில் மட்டும் கணக்கு வைத்திருப்போர் 22 பேர்
   - இலங்கை வங்கியில் மட்டும் கணக்கு வைத்திருப்போர் 8 பேர்.

   (i) தரப்பட்ட வென்னுருவை உமது விடைத்தாளில் பிரதி செய்து வெற்றிடங்களை நிரப்புக.
   (ii) ஏதாவது ஒரு வங்கியில் மட்டும் கணக்கு வைத்திருப்பவர்கள் எத்தனை பேர்?
   (iii) அன்றைய தினம் கூட்டத்திற்குச் சமூகமளித்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது?





   (b) வலயமட்டக் கணித வினாவிடைப் போட்டிக்கு பங்குபற்றுவதற்காக குறித்த பாடசாலை ஒன்றிலிருந்து கமலனும், விமலனும் அனுப்பி வைககப்படுகின்றனர். அப்போட்டியில் கமலன் தெரிவு செய்யப் படுவதற்கான நிகழ்தகவு $\frac{3}{5}$ உம் விமலன் தெரிவு செய்யப்படுவதற்கான நிகழ்தகவு $\frac{2}{3}$ உம் ஆகும்.
   (i) இவர்களுள் தெரிவு செய்யப்படுவதற்கான சாத்தியக் கூறை அதிகமாகக் கொண்டிருப்பவர் யார்?
   (ii) இருவருள் ஒருவர் மாத்திரம் தெரிவு செய்யப்படுவதற்கான நிகழ்தகவு யாது?

3. a. கூட்டல் விருத்தியொன்றின் ஐந்தாம் உறுப்பு 44, ஒன்பதாம் உறுப்பு 38 ஆகும்.
   (i) முதலாம் உறுப்பு
   (ii) பொது வித்தியாசம்
   (iii) முதல் 11 உறுப்புக்களின் கூட்டுத்தொகை என்பவற்றைக் காண்க.
   b. பெருக்கல் விருத்தி ஒன்றின் முதலாம் உறுப்பு 16 ஆகும். அதன் இரண்டாம் உறுப்பு மூன்றாம் உறுப்பிலும் 4 ஆற் கூடியதாகும்.
   (i) இப்பெருக்கல் விருத்தியின் பொதுவித்தியாசத்தைக் காண்க.
   (ii) ஐந்தாம் உறுப்பின் பெறுமானம் ஆறாம் உறுப்பின் பெறுமானத்திலும் இருமடங்காகும் எனக் காட்டுக.

4. ரூ 75000 ஐ வைத்திருக்கும் ஒருவர் ரூ 30000 ஐ 12% பங்கிலாபம் வழங்கும் தனா அன்ட் கம்பனியில் ரூ 10 பங்குகளை ரூ 15 வீதம் வாங்குவதற்கு முதலீடு செய்கிறார். மீதியை 8% பங்கிலாபம் வழங்கும் நாதன் அன்ட் கம்பனியில் ரூ 12 பங்குகளை ரூ 10 வீதம் வாங்குவதற்கு முதலீடு செய்கிறார்.
   (i) தனா அன்ட் கம்பனியில் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை யாது?
   (ii) அதன் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?
   (iii) தனா அன்ட் கம்பனியில் இருந்து பெற்ற வருமானம் எவ்வளவு?
   (iv) நாதன் அன்ட் கம்பனியின் முதலீடு யாது?
   (v) நாதன் அன்ட் கம்பனியில் வாங்கிய பங்குகள் எத்தனை?
   (vi) நாதன் அன்ட் கம்பனியின் பங்குகளின் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?
   (vii) நாதன் அன்ட் கம்பனியில் பெற்ற வருமானம் யாது?
   (viii) அவருக்கு கிடைத்த மொத்த வருமானம் யாது?

5. (i) AB = 8cm ஆகுமாறு கோட்டுத் துண்டம் ஒன்றை வரைக.
   (ii) $\hat{ABC} = 30^0$ ஆகவும், BC=9cm ஆகவும் இருக்குமாறு C எனும் புள்ளியைக் குறிக்க.
   (iii) A யில் இருந்து BC இற்கு செங்குத்து வரைக. இச்செங்குத்து BC ஐ சந்திக்கும் புள்ளியை D எனப் பெயரிடுக.
   (iv) AB இன் செங்குத்து இருகூறாக்கியை வரைக.
   (v) O வை மையமாகவும், OA ஐ ஆரையாகவும் கொண்டு வட்டம் வரைக.
   (vi) இவ்வட்டம் D இன் ஊடாகச் செல்லும் என்பதைக் காட்டி காரணத்தையும் தருக.

6. a. A, B எனும் இரண்டு வெளிச்ச வீடுகள் 25km இடைத்தூரத்தில் உள்ளன. A ஆனது B இற்கு மேற்கே உள்ளது. A இலிருந்து S எனும புள்ளியின் திசைகோள் $137^0$, B யிலிருந்து S இன் திசைகோள் $170^0$.மேற்படி தரவுகளுக் கமைய அளவிடைப்படம் வரைக.
   (i) நீர் பயன்படுத்திய அளவிடையைக் குறிப்பிடுக.
   (ii) AS இன் உண்மை நீளத்தைக் காண்க.




   b. மேற்படி உருவில் $yz = 15m$ எனின் $wx$ இன் நீளம் யாது?

## சமாதானத்திற்கும் தயார் ; போருக்கும் தயார்

# பாகிஸ்தானிலுள்ள தீவிரவாதிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க முடியாது

## ஜனாதிபதி சர்தாரி அறிவிப்பு

(லாகூர்)

மும்பை சம்பவம் தொடர்பில் 21 தீவிர வாதிகளையும் இந்தியா விடம் ஒப்படைக்க




வேண்டுமென்று புதுடில்லி விடுத்த கோரிக் கையை பாகிஸ்தான் நிராகரித்துள்ளது. இந்தியாகொடுத்துள்ள பட்டியலில் உள்ள 21தீவிரவாதிகள் மீதான குற்றச் சாட்டுகளுக் குப்போதிய ஆதாரத்தை இந்தியா வழங்க வில்லையென்று இதனால் அவர் களை இந்தியாவிடம் ஒப்படைக்க முடியாது என்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி கூறி யுள்ளார்.

இதன்மூலம் இந்தவிவகாரத்தில் பாகிஸ் தான் திடீரென மிகக் கடுமையான நிலையை எடுத்துள்ளது தெளிவாகியுள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

மும்பைத் தாக்குதல் நடந்தவுடன் முதலில் இந்தியாவின் கோரிக்கையை ஏற்று பாகிஸ் தான் உளவுப் பிரிவுத் (ஐ.எஸ்.ஐ) தலைவரை இந்தியாவுக்கு அனுப்புவதாக சர்தாரி கூறி யிருந்தார்.

ஆனால், இதையடுத்து அவரை பாகிஸ்தான் இராணுவத் தளபதி இஸ் பாக் கியானி சந்தித்து, ஐ. எஸ்.ஐ.தலைவரை அனுப்ப எதிர்ப்புத் தெரிவித்தார்.

இதையடுத்து சர்தாரி தனதுநிலையை மாற்றிக் கொண்டார்.

ஐ.எஸ்.ஐ தலைவரை அனுப்பமுடியாது பதிலாக, ஒரு பிரதி நிதியை அனுப் புகிறோம் என்றார்.இந்நிலையில், இந்தியாவுக்கு எதி ராக பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ள ஜெய்ஷ் ஏ முகம்மத் தலைவர் மௌலானா மசூத் அஸார், லஷ்கர் இ தொய்பா அமைப் பைச் சேர்ந்த ஹபீஸ் முகம்மத் சயீத், மும்பை தாதா தாவூத் இப்ராகிம், ஹர்கத் உல் முஜாகி தீன்,காலிஸ்தான் லிபரேசன் புரண்ட், ஹர் கத் உல் ஜிகாதி இஸ்லாமி ஆகியோர் உட் பட 21பேரை தன்னிடம் ஒப்படைக்குமாறு பாகிஸ் தான் தூதரை அழைத்து இந்திய வெளி யுற வுத்துறை கூறியது.

எனவே, இவர்களை ஒப்படைக்க மறுத் துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி, கடந்த செவ்வாய்க் கிழமை தேசி யபாதுகாப்பு கூட்டம் ஒன்றை அவரது இல் லத்தில் கூட்டினார்.

இதில் பேசிய ஜனாதிபதி சர்தாரி, இந்தியா வுடன் ஒத்துழைக்க பாகிஸ்தான் தயாராக வுள்ளது என்றார். அத்துடன், இந்தியாவுடன் அமைதிக்கும் தயார்; போருக்கும் பாகிஸ்தான் தயார் என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் நிருபர்க ளிடம் பேசிய சர்தாரி,

இந்தியா தான் கொடுத்துள்ள பட்டியலில் உள்ளவர்களுக்கு எதிராகப் போதிய ஆதாரங் களைத் தரவில்லை.

முதலில் இந்தியா 'ஆதாரங்களைத் தரட் டும்.போதிய ஆதாரங்கள் இருந்தால் அவர் களை பாகிஸ்தான் மண்ணிலேயே வைத்து




பாகிஸ்தான் நீதிமன்றங்களிலேயே விசாரித்து தண்டனை வழங்குவோம். ஆனால் அதற்கு ஆதாரம் வேண்டும்.

அதேபோல் பட்டியலில் உள்ள தாவூத் இப் ராகிம் பாகிஸ்தானிலேயே இல்லை.மேலும், இப்போது இந்தியாவிடம் பிடிபட்டுள்ள அஜ்மல் அமீர் கஸாவ் பாகிஸ்தானைச் சேர்ந்த வரே அல்லர். அதற்கான ஆதாரம் ஏதும் இல்லை என்று கூறியுள்ளார். (ஓ-5)

## மும்பை பயங்கரம் ; கருணாநிதி கவிதை

(சென்னை)



மும்பை பயங் கரவாதிகள் பொது மக்கள் மீது நடத் திய தாக்குதல் சம்பவத்தைக் குறித்து தாயகம் காத்து நிற்போம் என்ற தலைப்பில், முதல்வர் கருணா நிதி எழுதியுள்ள கவிதையில,

இந்திய தேசப்படம் ;
இதய வடிவம்–அதில்
மும்பை ஒரு மூச்சுப்பை
அறுபது மணி நேரத்துக்கு மேலாக ;
அதைத் தாக்கித் திக்குமுக்காட வைத்தது,
அராஜகத் தீவிரவாதம்!
அதன் பசிக்கு உணவாகிப்
பாதுகாப்புக்கு உரமாகிவிட்ட
கொமாண்டோக்களை,காவல்
துறையினரை;
கைதூக்கி வாழ்த்துகிறாள் கண் கலங்க
இந்தியத்தாய் !
"கார்க்கரே" அணியினர் தியாகத்தைப்
போற்றி
கைகூப்பித்தொழுகிறது காந்திதேசம் !
இந்தியத் தாயின் இன்னுமொரு மூச்சுப்
பைக்கோ
ரத்தநாள, நாடி, நரம்புகளுக்கோ
இப்படியொரு தீமை
எப்போதும் வராமல் தடுத்து நிற்கத்
தயங்காமல்;
இப்போதே அணிவகுப்போம்– கணமும்
தப்பாது விழித்திருப்போம் நம் தாயகம்
காத்து நிற்போம்!

# பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை கிடையாது; போர் தொடுப்பது பற்றி காலம் பதில் கூறும்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கருத்து

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கு எதிராகப் போர் தொடுக் கும் திட்டத்தை மறுப்பதற்கு இல்லை என்றும் தாவூத் இப்ராகிம் உட்பட 20 தீவிரவாதிகளை இந்தியாவுக்கு அனுப்பி வைக்குமாறு பாகிஸ் தானுக்கு கடிதம் எழுதி இருப்பதாகவும் வெளி யுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித் தார்.

முப்பையில் பாகிஸ்தானைச் சேர்ந்த லக்ஷர்– இ–தொய்பா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 195 பேர் பலியாகினர்.

10 பேர் இந்தியாவுக்குள் நுழைந்து 60 மணி நேரத்திற்கும் மேலாக இராணுவத் துடன் போரிட்டதை பார்த்து மக்கள் கொதிப் படைந்துள்ளனர்.

இதையடுத்து டில்லியில் உள்ள பாகிஸ் தான் தூதர் சாகித் மாலிக்கை வெளியுறவுத் துறை அதிகாரிகள் அழைத்து கடும் கண்ட னம் தெரிவித்தனர்.

அமெரிக்க புதிய ஜனாதிபதியாக பதவி ஏற் கவுள்ள ஒபாமா கூட தீவிரவாதிகளை ஒழிப் பதற்காக பாகிஸ்தான் மீது படையெடுக்க இந் தியாவுக்கு முழு உரிமை உண்டு எனக் கூறி யிருக்கிறார்.


எனவே, பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுக்கும் நிலைமை உருவாகி வருகிறது.

### இந்தியா போர் தொடுக்கும் வாய்ப்பு

இது குறித்து தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அளித்த பேட்டியில், பாகிஸ்தான் மீது போர் தொடுக்கும் வாய்ப்புக் குறித்து எந்தக் கருத்தும் என்னால் கூற முடியாது.

அதே நேரத்தில் எல்லா வாய்ப்புக்களும் இந்தியாவின் முன்னாள் இருக்கிறது. ஒவ் வொரு இறையாண்மை மிக்க நாட்டுக்கு தனது ஒரு மித்த எல்லையை பாதுகாக்கவும் அதற்காக தகுந்த இராணுவ நடவடிக்கை களை எடுக்கவும் உரிமை உண்டு.

அதேபோன்று இராணுவ நடவடிக் கை



களை எடுக்க வேண்டும் என கருதினால் நிச்ச யமாக மேற்கொள்ளப்படும் அந்த சமயத் தில் மக்கள் அறிந்து கொள்ளலாம்.

அதைப் பகிரங்கமாக வெளிப்படுத்த முடி யாது.

பேச்சுவார்த்தை கிடையாது. தற்போது மும்பைத் தாக்குதலைத்தொடர்ந்து இயற்கை யாகவே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள் ளது.

மக்களின் உணர்வுகள் பாதிக்கப்பட்டுள் ளன. எனவே பாகிஸ்தானுடன் அமைதிப் பேச்சு வார்த்தையைத்தொடர இந்திய அரசு ஆர்வம் காட்டமாட்டோம் பாகிஸ்தானில் இருந்து தீவி ரவாதம் தூண்டிவிடப்படும் நிலையில் , அந்த நாட்டுடன் அமைதிப்பேச்சு உட்பட எந்த வொரு வழக்கமான நடவடிக்கைகளையும் தொடர் வது மிகவும் கடினம்.

இவ்வாறு பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். (5)

# என்னைக் கொன்று விடுங்கள் அல்லது எனது குடும்பத்தை அழித்து விடுவார்கள்

## பிடிபட்ட தீவிரவாதி மன்றாட்டம்

(மும்பை)

மும்பை தாக்குதலை நடத்திய போது பிடிப் பட்டு விசாரிக்கப் பட்டு வரும் தீவிரவாதி அஜ் மல் அமீர் கஸாப், தன்னைக்கொன்று விடும் படி இந்தியதிகாரிகளிடம் கோரிக்கை விடுத் துள்ளார்.

இல்லாவிட்டால் தனது குடும்பத்தினரை லஷ்கர் இ தொய்பா அமைப்பு கூண்டோடு காலி செய்து விடும் என்றும் கூறியுள்ளார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் பல் வேறு தகவல்கள்கிடைத்த வண்ணம் உள்ளன.

அஜ்மல் அமீர் கஸாபிடம் அமெரிக்கா வின் பெடரல் பீரோ ஒப் இன்வஸ்டிகேசன் அதிகாரி களும், இஸ்ரேலின் மொசாட் உளவுப் பிரிவி னரும் விசாரணைகளை மேற்கொண்டுள் ளனர்.

இதுவரை அவரிடம் இந்திய உளவுப் பிரி வான ஐ.பி., றோ, மும்பை தீவிரவாதத் தடுப்பு பொலிஸார், இராணுவ உளவுப் பிரிவினர் ஆகி யோர் மட்டுமே விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், இந்தியா வந்துள்ள எப்.பி. ஐ. மற்றும் இஸ்ரேலிய உளவுப் பிரிவினரும் அவரிடம் விசாரணையை ஆரம்பித்துள் ளனர்.

இந்த விசாரணைகள் குறித்து நாங்கள் தரும் தகவல்களை விட நேரில் அவரிடமே விசாரணை நடத்தி பாகிஸ்தானின் தொடர் புகள் குறித்த விபரங்களைப் பெற்றுக் கொள் ளலாம் என அமெரிக்காவிடம் இந்தியா கூறி விட்டது.



முன் ன தாக தாஜ் மற்றும் ஒப ரோய் ஹோட் டல்களில் அமெ ரிக்கர்கள் பலி யானது குறித்து எப்.பிஐயும்தனி யாக வழக்குப் பதிவு செய்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

கஸாப் எந்த இடத்தில் வைக்கப்பட்டு விசா ரிக்கப்படுகிறார் என்பது இரகசியமாக வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, முக்கிய நாடுகளின் தூதர் களை அழைத்து இந்திய வெளியுறவு அதிகா ரிகள் கஸாப்பிடம் இருந்து கிடைத்த தகவல் களை அளித்தனர்.

பாகிஸ்தானில் தீவிரவாத அமைப்புகளி டம் தாங்கள் பெற்ற பயிற்சி, இந்தப் பயிற்சியில் ஐ.எஸ். ஐ.யின் பங்கு ஆகியவை குறித்து கஸாப் கூறிய விபரங்களை இந்த நாடுகளி டம் இந்தியா பகிர்ந்து கொண்டுள்ளது. (ஓ-5)

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 06.12.2008 முதல் 08.12.2009 வரை

## மகரம்

உத்தராடம்,2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2 பாதம் வரை

(பெயரின் முதல் எழுத்துக்கள் போ, ஜ,ஜீ, ஜி, ஜே,ஜோ, கா, க, கி உள்ளவர்களுக்கும்)

### வழிபாட்டால் வளர்ச்சி கூடும்!

நினைத்தை அடைய நிதானத்தை கடைப்பிடிக்கும் மகர ராசி நேயர்களே !

விரய ஸ்தானத்தில் இதுவரை சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது ஜென்ம ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். ஜென்ம ராமர் வனத்திலே என்ற வாசகம் செயல்படுமோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம் .குரு விரயாதிபதியாகவும் சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்குவதால் ஜென்மத்தில் உலா வரும் போது வளர்ச்சி யையும்,தளர்ச்சியையும் மாறி மாறிக் கொடுக்கும் என்றே சொல்ல வேண்டும்.

அஷ்டமத்தில் சனியும் உலா வருவதால் ஏற்ற -இறக்கம் வரும்போது எதிர்வரும் பலன்கள் இனிய பலனாகவே இருக்க வேண்டுமானால் விரதம்,வழிபாடுகளில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். குறிப்பாக குருவின் பார்வை பதியும் இடங்களாவது பலன் தரும் என்பதால் குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே திசை மாறிய தட்சணாமூர்த்தி வழிபாடும் திருப்தியான வாழ்க்கைக்கு சான்றோர்களின் ஆசியையும் பெற்றுக் கொள்வது நல்லது.

குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 5,7,9 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. எனவே,பிள்ளைகள், பூர்வ புண்ணியம் ,வாழ்க்கைத் துணை, தந்தை வழி ஒத்துழைப்பு, பங்காளிகள் பாசம்,மாற்றினத்தவரின் உறவு, உறவினர்களின் உள்ளம் ஆகியவற்றில் எல்லாம் நற்பலன்களைக் கொடுக்க குருவின் பார்வை தான் ஒத்துழைப்புச் செய்ய வேண்டும். எனவே முறையாக குரு ப்ரீதி செய்து கொள்வதோடு,சிறப்பு பரிகாரங்களையும் குருவுக்கு உகந்த நாளில் செய்து வந்தால் கொண்டாட்டங்களை நாளும் சந்திக்கலாம்.

### நிதானமாகச் செய்தாலும் நிறைவுடன் செய்பவர்கள்

தளராத மனதைப் பெற்றவர்கள் நீங்கள் உங்கள் ராசிநாதனாக சனி விளங்குவதால் எதையும் ஒரு முறைக்கு பலமுறைக்குயோசித்து நிதானமாகவே செய்து முடிப்பீர்கள். உங் களைப்பற்றிய செய்திகளை ஒருவரிடமும் சொல்ல மாட்டீர்கள் அதே நேரத்தில் மற்றவர்களின் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து கேட்பீர்கள் யார் எதைச் சொன்னாலும் ஏன்? எப்படி என்ற கேள்வி உங்களிடம் இருந்து வந்து கொண்டேயிருக்கும். சிக்கனத்தை கடைப்பிடிப்பதில் வல்லவர்களாக விளங்குவீர்கள். உறவும் பகையும் உங்களுக்கு மாறி மாறி வரும் பகையை நட்பாக்கிக்கொள்ள கோபத்தைக் குறைத்துக்கொள்வது புத்திசாலித்தனமாகும். ஒரு காரியத்தை செய்து விட்டு அடடா இப்படிச் செய்து விட்டோமே என்று வருத்தப்படுவீர்கள்.

பார்ப்பதற்கு பச்சைப்பிள்ளை போல் தோற்றமளித்தாலும் உலக விடயங்கள் அனைத்தையும் தெரிந்து வைத்திருப்பீர்கள். பால்ய விவாகத்தால் உங்களுக்கு பலவித பிரச்சினைகள் உருவாகலாம். எனவே தாமத விவாகமே உங்களுக்கு தகுந்த வாழ்க்கையை அமைத்து கொடுக்கும். உங்கள் ராசிநாதனாக சனி இருப்பதால் கணப் பொருத்தம் யோனிப் பொருத்தம் மகேந்திரப்பொருத்தம் ரஜ்ஜுப் பொருத்தம் ஆகிய பொருத்தங்கள் அமைந்த வாழ்க்கைத் துணையைத் தேர்ந் தெடுத்தால் தான் இல்லறத்தில் இனிமை காண முடியும். நட்பு கிரக எண்களின் ஆதிக் கத்தில் உங்கள் பெயரையும் தொழில் நிலை யத்தின் பெயரையும் அமைத்துக்கொண்டால் ஒப்பற்ற வாழ்க்கையை காண இயலும்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எப்படிப் பட்ட மாற்றங்களை வழங்கப்போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**முப்பெரும் பார்வையால்**
**ஏற்படும் முன்னேற்றம்!**
**ஜென்மத்தில் குரு வந்தால்**
**செலவுகளே அதிகரிக்கும்!**
**பொன் பொருள்கள் வாங்குவதும்**
**பூமிகளின் சேர்க்கைகளும்**
**மன்பதையில் மேற்கொண்டால்**
**மனம் இனிக்கும் வாழ்வமையும்!**
**வந்திணைந்த குருவை**
**வழிபட்டால் வளர்ச்சி வரும்!**
**என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.**

அந்த அடிப்படையில் ஜென்மத்தில் குரு வரும் பொழுது சிக்கனத்தை நீங்கள் கடைபிடிக்க முடியாது. ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்படும். அடுத்தவர்களை நம்பி வாங்கிக் கொடுத்த தொகை அப்படியே நிற்கும். குடும்பச் சுமை கூடும். கொடுக்கல் வாங்கல்களில் ஏமாற்றங்கள் ஏற்படலாம். எனவே விரோதங்கள் அகலவும்,வியக்கும் வாழ்க்கை அமையவும் வியாழன் தோறும் விர தங்க ளையும், வழிபாடுகளையும் மேற் கொள்வது நல்லது.

### விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை

குரு பார்த்தால் கோடி நன்மை என்பதற்கு ஏற்ப குருவின் பார்வை பதியும். இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. அந்த அடிப்படையில் குருவின் பார்வை 5ஆம் இடத்தில் பதிவதால் புத்திர ஸ்தானம் பலப்படுகிறது. எனவே . குழந்தைகளின் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரும். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளுக்கு உடன் இருப்பவர்க்ள ஒத்துழைப்புச் செய்வர். பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். புத்திர பாக்கியம் கிடைக்கும்.

குருவின் பார்வை 7ஆம் இடத்தில் பதிவதால் சப்தம ஸ்தானம் பலமடைகிறது. எனவே குடும்ப பிரச்சினைகள் சுமூகமாக முடியும். விலகிச் சென்ற வாழ்க்கைத் துணை வீடு வந்து சேரும் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் தொழில் தொடங்க திட்டங்கள் தீட்டும். பொழுது சற்று பொறுமையை கடைப் பிடிப்பது நல்லது. வீடு கட்டும் முயற்சியால் அல் லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள் ஜென்ம குருவால் அலைச்சலும் குடும்பச் சுமையும் கூடினாலும் அதன் பார்வை பலத்

**ஜோதிடக் கலைமணி**
**சிவல்புரி சிங்காரம்**

தால் யோகங்கள் ஏற்பட முறையான வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 9-இல் பதிவதால் தூரத்து உறவினர்களால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். கூட்டு முயற்சியால் பிரிந்து சென்றவர்கள் வந்திணைவர். பெற்றோர் வழியில் அனுகூலம் கிடைக்கும். சகோதரர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் சமரசம் ஆகலாம். அருளாளர்க ளின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் பொருள் வரவைப் பெருக்கிக் கொள்ள இயலும். உழைப்பு அதிகரிக்கும் இந்த நேரத் தில் உடல்நிலையை மட்டும் சீராக வைத்துக் கொள்வது நல்லது.

### வாகன யோகத்தால் வளர்ச்சி காணும் நேரம்

(20.1.2009 முதல்21.3.2009 வரை)

சந்திரன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும் பணத் தேவைகள் பூர்த்தியாகும் .களத்திரன் வழியே ஏற்பட்ட கவலை அகலும் அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும். பிரிந்து சென்ற உறவினர்கள் பிரச்சினைகளை விட்டு மீண்டும் வந்திணைவர். புதிய வாகனம் வாங்கும் எண்ணம் மேலோங்கும் மன அமைதி ஏற்படவும் மகிழ்ச்சி அதிகரிக்கவும் ,மதிப்பும் மரியாதையும் கூடவும் மதி வளம் பெற்ற நாளில் மலை வலம் வருவது நல்லது.

### தொழில் வளர்ச்சி கூடும் நேரம்

(22.3.2009 முதல் 8.12.2009 வரை)

இந்த காலகட்டத்தில் செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சரிக்கப்போவதால் செல்வ நிலையில் உயர்வு கிடைக்கும். செல்வாக்கு மேலோங்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வும் உற்சாகத்தோடுபணிபுரியும்வாய்ப்பும்வந்து சேரும். வீடு கட்டும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வியாபாரயுக்திகளைக்கையாளுவீர்கள். இளைய சகோதரத்தால் ஒரு சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் முடிவில் அனுகூலமாக இருக்கும்.

1.5.2009 முதல் 15. 8.2009 வரைக்கும் பத்தில் குரு சஞ்சரிக்கப்போவதால் தெம்பும். உற்சாகமும் உள்ளத்தில் குடிகொள்ளும். தெய்வப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள் . சனியை குரு பார்க்கப்போவதால் சங்கடங்கள் அகலும். சந்தோஷங்கள் குடிகொள்ளும்.

### வக்ர குருவின் ஆதிக்க காலம்

(29.6.2009 முதல் 12.11.2009 வரை)

குரு வக்ர கதியில் இயங்குகிறார். இக்காலத்தில் சகாய ஸ்தானாதிபதி வக்ரம் பெறுவதால் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகள் ஏற்படலாம். கண்ணேறு பட்டதோ என்று கவலைப்படுவீர்கள். பக்கத்தில் இருப்பவர்கள் அனுசரித்துச் சென்றால் சிக்கல்களில் இருந்து விடுபடலாம் கொடுக்கல்-வாங்கல்களில் கூடுதல் கவனம் தேவை. இக்காலம் பொற்காலமாக அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். மலைமேல் கோயில் கொண்ட குமரனை மனதில் நினைத்து வழிபாடு செய்யுங்கள்.

### கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டவேண்டிய நேரம்

(6.12.2008முதல் 19.1.2009வரை)

சூரியன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. இல்லத்தில் உள்ளவர்களை அனுசரித்து சென்றால் உள்ளத்தில் மகிழ்ச்சிகூடும். யாரையும் நம்பி பொறுப்புகள் சொல்ல வேண்டாம். உடன்பிறப்புகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். வீட்டு பராமரிப்பு செலவுகளை மேற்கொள்வீர்கள். சில் காரியங்களில் தடைகளும் தாம தங்களும் நடைபெற்றாலும் அது நல்லதுக்கே என்று நினைத்துக் கொள்ளுங்கள். உத்தியோகத்தில் உடன் இருப்பவர்களிடம் ஒரு சில விடயங்களைக் கூறுவதன் மூலம் பிரச்சினைகள் ஏற் படலாம்.

### மகர ராசி பெண்களுக்கு

மகர ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சியால் மனக்குழப்பங்கள் அகலும் மாமன் மைத்துனர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும். அனைத்துக் காரியங்களையும் யோசித்துச் செய்வதன் மூலமும் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவதன் மூலமும் இனத்தாரை அனுசரித்து செல்வதன் மூலமும் இல்லத்தில் இனிய பலன்கள் நடைபெறும் தந்தை வழி ஒத்துழைப்பு குறைந்தாலும் தாயின் ஆதரவு கிடைக்கும். வரவைக் காட்டிலும் செலவு கூடும் என்றாலும் வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருக்கும் வரை பொறுமை உங்களுக்கு பெருமை தரும்.பேச்சில் கனிவான சொற்களை பயன்படுத்தினால். காரிய வெற்றி காண முடியும். சுய ஜாதகத்தில் குருவின் சார பலமறிந்து வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். கண்ணன் வழிபாடு கவலையைத் தீர்க்கும்.

### பலன் தரும் வழிபாடு

ஜென்ம குருவால் சிக்கல்கள் ஏற்படாமல் இருக்கவும் செல்வ நிலையில் உயர்வுகள் கிடைக்கவும் நன்மை தருவார். கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்யுங்கள். அருகிலுள்ள கிருஷ்ணர் கோவிலுக்குச் சென்று வழிபட்டு மகத்தான வாழ்வை அமைத்துக் கொள்ளுங்கள். தாராபலம் பெற்ற நாளில் வழிபாடு செய்தால் ஜோரான வாழ்வு அமையும். *(வளரும்)*

---

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு அமெரிக்கா நிதியுதவி

## இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் தகவல்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், மழை மற்றும் வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக அமெரிக்க அரசாங்கம் ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் நிறுவனத்திடம் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது. இந் நிதியின் மூலம் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு உணவு தவிர்ந்த ஏனைய நிவாரணப் பொருட்கள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது.

இந்த நிவாரணப் பொருட்களை விநி யோகிக்கும் பணியை உள்நாட்டிலுள்ள அமைப்புக்களுடன் இணைந்து யுனிசெப் நிறுவனம் மேற்கொள்ளுமென்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-6-5)

---

**வெளிநாடுகளில் வதியும்**

# இலங்கை ஓய்வூதியம் பெறுவோரின் தகவல்களை திரட்ட நடவடிக்கை

(கொழும்பு)

தற்போது வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுவோரின் புதிய தகவல்களை திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு. மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. அரச நிறுவ னங்களின் தொழில் புரிந்து ஓய்வு பெற்ற வெளிநாடுகளில் தற்போது வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுவோரின் புதிய தகவல்களை திரட்டும் முகமாக வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுவோர் தங்களது தற்போதைய வெளிநாட்டு முகவரிகளை www.ds.gov.lk/colombo என்ற இணையத்தள முகவரியின் ஊடாக தெரியப்படுத்துமாறு கொழும்பு மாவட்ட செயலாளர் ஜி.ஏ.ஜே.சில்வெஸ்டர் கேட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தைச்சேர்ந்த ஏறக்குறைய 4ஆயிரம் ஓய்வூதியம் பெறுவோர் பல்வேறு நாடுகளில் வசித்துவருவதாகவும் அவர்களின் தகவல்களை திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஓ-6)

உலகில் மூன்று பொருட்கள்– மிகவும் முக்கிய மதிப்புள்ளவைகளாக கணக்கிடப்படுகின்றன அவை: அறிவு–சுகாதாரம்–நட்பு.

–மியன்மார்

வலம்புரி

# தொற்று நோய் அபாயம் உண்டு மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும்

அண்மையில் பெய்த கடும் மழை, புயல் காரணமாக எங்கும் வெள்ளம் பெருகியது.

இதனால் கழிவுப் பொருட்கள் வெள்ளங்களுடன் அடிபட்டு குடியிருப்புப் பகுதிகளுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இது தவிர இறந்த கோழிகள், கால்நடைகள் என்பவற்றின் கழிவுகளும் மக்களின் வாழ்விடங்களை அசுத்தப்படுத்தி விட்டன.

இதற்கு மேலாக பெரும்பாலான கிணறுகள் வெள்ளத்தால் மூடுண்டு போனதால் குடிநீர் மாசுபட்டுள்ளது. எனவே தொற்று நோய்க்கான ஏதுக்கள் ஏராளம் உண்டென்பது மறுக்கமுடியாத உண்மை.

தொற்று நோயைப் பொறுத்தவரை வருமுன் காப்பதே சாலச்சிறப்புடையது.

நோய் வந்தபின் சிகிச்சை பெறுவோம் என்ற அசமந்தப் போக்கு பெரும் பாதிப்பையே தோற்றுவிக்கும்.

எனவே தொற்றுநோய்த் தடுப்பில் தீவிரமாகச் செயற்படுவது கட்டாயமானதாகும்.

பொது அமைப்புகள், சனசமூக நிலையங்கள், மாதர் அமைப்புகள் ஒன்றிணைந்து சிரமதானப் பணிகள் மூலம் தத்தம் பகுதிகளை தூய்மைப்படுத்த வேண்டும்.

இதில் பாடசாலைகளைத் தூய்மைப்படுத்துவதில் பொதுமக்களின் பங்களிப்பு அவசியமாகின்றது.

வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட அனர்த்தத்தில் பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் கணிசமானவை. அதேநேரம் மாணவர்கள் விளையாட்டு மைதானங்களில் ஓடி விளையாடும் சந்தர்ப்பங்களும் நிறையவே இருப்பதால் பாடசாலைச் சூழலை தூய்மைப்படுத்துவதில் பெற்றோர்கள் கரிசனை காட்டவேண்டும்.

அதேநேரம் குடிநீர் விடயத்தில் கவனம் செலுத்துவது மிகக் கட்டாயமானதாகும். பொதுவாக குடல் சார்ந்த தொற்று நோய்கள் ஏற்படுவதில் மிகப்பெரும் பங்கை அசுத்தமான குடிநீரே கொண்டுள்ளது.

ஆகவே தூய்மையான குடிநீரைப் பருகுவது உறுதி செய்யப்படவேண்டும்.

தூய்மையான குடிநீரைப் பருகுவதில்; கொதிக்கவைத்து நீரை சுத்தமாக்குதல், குளோரின் இட்டு சுத்தமாக்குதல் என்ற இருவழிகளில் மேற்கொள்ளமுடியும்.

இதில் குளோரின் இடுதல் தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளலாம்.

சுத்தமான குடிநீரைப் பருகுதல் என்ற விடயத்தில் பெற்றோர்கள் காட்டும் அக்கறை தொற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்கான முதன்மை வழியாகும்.

இவை தவிர தனிநபர் சுத்தம் பேணுதல், உணவுப் பண்டங்களை மூடிவைத்தல், வெளியிடங்களில் உணவுப் பொருட்களைத் திறந்து வைத்து விற்பனை செய்வதைத் தடுத்தல் என்றவாறு ஒவ்வொருவரும் தத்தம் சுக நலனைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

# மன்னார், வவுனியா வைத்தியசாலைகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

## வைத்தியர்கள் மீண்டும் கடமைக்கு

(கொழும்பு)

பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து வவுனியா வைத்தியசாலைக்கான பாதுகாப்பை அதிகரித்துள்ளன. வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் சிங்கள வைத்தியர் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு கிழக்கில் பணியாற்றிய சிங்கள வைத்தியர்கள் வெளியேறியிருந்தனர். வைத்தியர்களுக்கு 5 மில்லியன் ரூபா நட்ட ஈடு வழங்க அரசாங்கம் முன்வந்ததைத் தொடர்ந்து அவர்கள் நேற்று முதல் பணிகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனை முன்னிட்டு வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் முதல் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

நிரந்தரமான பொலிஸ் சோதனை நிலையம் வைத்தியசாலையின் பிரதான வாயிலில் அமைக்கப்பட்டிருப்பதுடன் சந் தேகத்திற்கிடமானவர்கள் சோதனை நிலையத்தில் சோதனை யிடப்பட்டபின்னரே அனுமதிக்கப்படுவார்கள் எனக் கூறப்படுகிறது.

வவுனியா வைத்தியசாலையில் 13 சிங்கள வைத்தியர்களும் 9சிங்கள தாதிமார்களும் பணியாற்று கின்றனர். மட்டக்களப்பு துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தைத் தொடர்ந்து வெளியேறியிருந்த அவர்கள் நேற்றைய தினம் பணிக்கு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, மன்னார் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய 6 வைத்தியர்களும் பணிக்குத் திரும்பும் பட்சத்தில் வைத்திய சாலைக்கும் அவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும் என அண்மையில் மன்னார். பொது வைத்தி ய சாலைக்கு சென்றிருந்த விசேட பொலிஸ் குழு உறுதி மொழி வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-6-5)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய பாதுகாப்பு நடைமுறை

## 4 மணி நேரத்திற்கு முன்பு பயணிகள் வரவேண்டும்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பினை பலப்படுத்தும் வகையில் புதிய பாதுகாப்பு நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. கடந்த திங்கள் முதல் இந்த புதிய பாதுகாப்பு நடைமுறை அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்று விமான நிலையத்தின் நிர்வாகப் பிரிவு தெரிவித்தது.

புதிய பாதுகாப்பு நடைமுறைக்கு அமைய பயணி ஒருவர் 4 மணி நேரத்துக்கு முன் விமான நிலையத்துக்கு வருகை தர வேண்டும் என்று பயணியுடன் ஒருவர் மட்டுமே விமான நிலையத்துக்குள் அனுமதிக்கப்படுவர் எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது. இந்த பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பில் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ள விமான நிலையத்தின் நிர்வாகப் பிரிவு அதில் குறிப்பிட்டுள்ளதாவது,

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு உள் வரும் மற்றும் அங்கிருந்து வெளிச்செல்லும் பயணிகளின் பாதுகாப்பு கருதியே இந்த புதிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் குறித்த பயணிகள் பயணிக்கவுள்ள விமானங்கள் புறப்படுவதற்கு நான்கு மணித்தியாலங்களுக்கு முன்னரே அவர்கள் விமான நிலையத்துக்கு பிரவேசிக்க வேண்டும்.பயணிகள் மற்றும் அவர்களின் பயணப் பைகள் போன்றவற்றின் சோதனைக்காகவே இந்த வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

அத்துடன் பயணிகளை வழியனுப்புவதற்காக அவர்களுடன் வருகை தரும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் விமான நிலையத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதோடு பயணியின் தேவை கருதி ஒருவர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.

பயணிகள் போன்று விமான நிலையத்தினதும் பாதுகாப்பு கருதி எடுக்கப்பட்டுள்ள இப்பாதுகாப்பு நடவடிக்கைக்கு பொது மக்கள் தமது ஒத்துழைப்பை வழங்குவதோடு இதனால் ஏற் படும் சிரமங்களையும் பொறுத்துக்கொள்ள வேண்டும். (ஓ-5)

# தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கு நடைபெற விருந்து பிற்போடப்பட்ட செயலமர்வுகள் பின்வரும் ஒழுங்கில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி தரம் 8க்கான ஆங்கிலப் பாடம் சாவ.டிறிபேக் கல்லூரியிலும் சங்கீதம் மற்றும் விஞ்ஞான பாடங்கள் சாவ. மகளிர் கல்லூரியிலும் 9,10ஆம் திகதி களில் விசேட கல்வி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்திலும் 14 ஆம் திகதி சுகாதாரமும் உடற் கல்வியும் சாவ. இந்துக்கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுகளுக்கு அதிபர்கள் பொருத்தமான ஆசிரியரை அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் கேட்டுக் கொள்கிறார்.

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 48

வழிபாட்டு நடைமுறைகளைச் செய்வதற்கு உரிய ஒழுங்கு முறை எது என எல்லோரும் அறிய விரும்பும் காலம் இது. கோயில் என்ற அமைப்பு தோன்ற முன்னர் இயற்கை ஆற்றல்களை வழிபடும் மரபு இருந்தது. மக்கள் தம்முடைய எண்ணத்தில் தோன்றிய இயற்கையான வழிபாட்டு உணர்வில் வழிபாடு செய்தனர். தமது முயற்சியால் விளை பொருட்களைப்பெற்றபொழுது விளக்கேற்றி வைத்து அவ் விளை பொருட்களை மடையாகப் பரவி இறையாற்ற லுக்கு பணிந்து வணங்கினர். தமது உணர்வு நிலைக்கேற்ப இசை எழுப்பி ஆடிப்பாடி வழிபாடு செய்தனர்.

கோயில் என்ற அமைப்பு தோன்றிய போது வழிபாட்டு மரபில் மாற்றம் ஏற்பட்டது. இறை உருவங்கள் உறைகின்ற தூய்மையான அருள் நிறைந்த இடங்களாக கோயில்கள் தனித்துவப்படுத்தப்பட்டன. வழிபாட்டு நடைமுறைகளை ஒழுங்கு முறையிலே செய்வதற்கு ஒருவர் நியமிக்கப்பட்டார். பூசுரர் , அந்தணர்,என அழைக்கப்பட்ட உயர்ந்த குலத்தவரால் வழிபாடு நெறிப்படுத்தப்படுகின்ற மரபு தோன்றிற்று. வடமொழியில் இருந்த இறைவனை பரவும் பாடல்களை இசைத்து மூன்று வேளை அல்லது 6 வேளை பூஜை செய்யும் நடைமுறையும் ஏற்பட்டது. அந்தணர் குலத்தில் தோன்றியவர்களின் பணியாக அது வரையறை செய்யப்பட்டது.

நாயன்மார் காலத்தில் கோயில் வழிபாட்டில் மக்களை நெறிப்படுத்தவேண்டிய தேவையும் இருந்தது. சமணம் , பௌத்தம் போன்ற பிற மதங்களின் செல்வாக்கு மக்களிடையே வேகமாகப் பரவ மக்கள் அம்மதங்களோடு தம்மை இணைத்துக்கொள்ளலாயினர்.மக்களை மீண்டும் சைவ வழிபாட்டிற்கு அழைத்துவரும் முயற்சியில் நாயன்மார் முனைப்பாக ஈடுபட்டனர். கோயில்களைப்பற்றி பதிகங்கள் பாடி இசையால் மக்களை ஈர்த்தனர். அப்போது கோயில்களில் பூசை செய்யும் அந்தணரின் தகுதிப்பாட்டையும் தனித்துவத்தையும் தமது பாடல்களிலே விளக்கியுள்ளனர்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பொய்மை இல்லாத வாய்மையான சொற்களைப் பேசுபவர்,திருநீற்றை உடம்பிலே பூசியிருப்பவர் ,இறைவனை இசையால் போற்றுபவர் ,வேளை தோறும் பூசை செய்பவர் தமது கையினால் தீ யை வளர்த்து மறையை வளர்க்கும் பணியைச் செய்பவர் அத்தகைய அந்தணர் பணி செய்யும் கோயில்களிலே சென்று வழிபாடு செய்வதால் நற்பயன்கள் உண்டாகும்.கோயிலுக்கு போகமுடியாத போது அங்கு உறைகின்ற இறைவனை மனத்தால் நினைந்து வழிபாடு செய்தால் எமக்கு எல்லாம் இனியவாக இருக்கும் என சுந்தரர் கூறுகிறார். தான் வாழ்ந்த வழிபாட்டுச்சூழலை நினைத்த போது மனதில் ஏற்பட்ட இனிமையான உணர்வை பாடலில் பதிந்துள்ளார்.

"பொய்யாத வாய்மையால் பொடிபூசிப் போற்றிசைத்துப் பூசை செய்து
கையினால் எரியோம்பி மறை வளர்க்கும் அந்தணர்தம் கருப்பறியலூர்க்
கொய்யும் மலர் சோலைக் குயில் கூவ மயில் ஆலும் கொகுடிக் கோயில்
ஐயனை என் மனத்தினால் நினைந்த போது அவர் நமக்கு இனி யவாறே"

# பார்ப்போர் தம் மனதை பறிகொடுத்த யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின்

## தமிழ்த்தின விழா - 2008

பெரிய பாடசாலைகளுக்கு ஆரம்பப் பாடசாலைகள் சளைத்தவையல்ல என்பதை யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை நடத்திய தமிழ்த்தின விழா உறுதி செய்துள்ளது.


விருந்தினர்கள் வரவேற்பு...

ஆம் ! கடந்த 22.11.2008 அன்று யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் தமிழ்த் தினவிழா யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.


அதிபர் மங்கள விளக்கேற்றுகிறார்...

நிகழ்விற்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா பிரதம விருந்தினராக கலந்துகொள்ள சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) திருமதி மீரா அருள்நேசன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, நல்லூர் கோட்ட கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம், யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### விருந்தினர் வரவேற்பு

முன்னதாக விருந்தினர்களை பாடசாலை அதிபர் திருமதி த.அ. துரைசிங்கம் அவர்கள் வரவேற்று விழா மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார். வரவேற்பின் இரு மருங்கிலும் மாணவிகள் பூச்சொரிந்து விருந்தினர்களை வரவேற்றனர்.

மங்கள விளக்கேற்றலுடன் ,மேடையின் இருமருங்கிலும் இரண்டு மாணவிகள் தீபங்களை ஏந்திய வண்ணம் நின்றமை பார்ப்போரை புதுமைக்குள் அழைத்துச் சென்றது.

நிகழ்வில் ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன சுவாமிகள் மேடையின் இருமருங்கிலும் மாணவச் சிறுமிகள் தீபமேந்தியவாறு நின்ற காட்சியை அற்புதக் காட்சியாகவர்ணித்தமை ஏற்பாட்டாளர்களின் கற்பனா சக்திக்குக் கிடைத்த வெற்றி எனலாம்.

மண்டபம் நிறைந்த பெற்றோர்கள் மற்றும் விருந்தினர்கள் மத்தியில் தமிழ்த் தின விழாகளைகட்டியது.

பாடசாலையின் மாணவத் தலைவி செல்வி டிற்சிகா சுந்தரலிங்கம் மிகச் சிறப்பாக நிகழ்வுகளை அறிவிப்புச் செய்தார்.


தலைமைத்துவப் பண்பை ஆரம்பப் பாடசாலைகளே உருவாக்குகின்றன என்பதை நிஜப்படுத்துவதாக அந்த மாணவியின் அறிவிப்புகள் அமைந்திருந்தன.

விழாவின் தொடக்கவுரையை பாடசாலை அதிபர் திருமதி த.அ.துரைசிங்கம் நிகழ்த்தினார். பாடசாலையின் செயற்பாடு, ஒழுங்கு, மாணவிகளின் சாதனை என்ற பல் பரிமாணத்தில் அவரின் தொடக்கவுரை அமைந்திருந்தது.


நாடகத்தில்....

### கலை நிகழ்வுகள்

ஆரம்பப் பாடசாலைகள் இவ்வாறு செய்ய முடியுமா? என்ற கேள்வியை உடைத்தெறியும் வகையில் யாழ். இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலையின் கலை நிகழ்வுகள் ஆரம்பமாகின.


அவையில் விருந்தினர்கள்...

இயல் இசை நாடகம் எனும் முத்தமிழை எடுத்தியம்பும் வகையில் கலை நிகழ்வுகள் தயார் செய்யப்பட்டிருந்தன. விவாத அரங்கு, குழுஇசை, நாடகம், நாட்டிய நாடகம்,வில்லிசை ஆகிய நிகழ்வுகள் பார்வையாளர்களை பரவசப்படுத்தின. நாட்டிய நாடகத்தில் பங்கேற்ற மாணவிகளின் அற்புத நடிப்பும், நெறி

## நேரடிப் பார்வை

யாள்கையும் அவையில் வீற்றிருந்த விருந்தி னர்களையும் பார்வையாளர் களை யும் பரவசப்படுத்தி யமை மனம் கொள்ளத்தக்கது. ஒவ்வொரு பாத்திரத்தையும் ஏற்று கொண்ட மாணவிகள் தமக்குக் கொடுக்கப்பட்ட வகிபங்கை கனகச்சிதமாக வெளிப்படுத்தினர். இவ்வாண்டு தனி நடனத்தில் கீழ்ப் பிரிவில் இப்பாடசாலை மாணவி செல்வி பவித்திரா கு ம ர கு ரு ப ர ன் இரண்டாம் இடத்தைப்பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.மாணவிகளின் விவாத அரங்கு துணிச்சல் மிக்க அரங்கேற்றமாக அமைந்தது. பெரியவர்களைக் கூட தட்டுத்தடுமாற வைக்கக்கூடிய விவாத அரங்கை மிகச் சிறப்பாக மாணவிகள் செய்து முடித்தமை ஆரம்பப் பாடசாலை மாணவர்களிடையே விவாத அரங்கை அறிமுகம் செய்ய முடியும் என்ற புதிய எண்ணக் கருவிற்கு நுழைவாயில் அமைத்ததெனலாம். மேற் கூறிய நாட்டிய நாடகம், விவாத அரங்கு போன்றே நாடகம். வில்லிசை போன்ற நிகழ்வுகளும் அற்புதப் படைப்புக்களாக அவை ஏறின. நிகழ்வில் பரிசளிப்பு, தமிழ்த் துறை ஆசிரியர்கள் கௌரவிப்பு என்ப னவும் இடம் பெற்றன. ஒட்டுமொத்தத்தில் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை யின் தமிழ்த்தின விழா இத்துணை சிறப் பைப் பெறுவதற்கு அதிபர் திருமதி த.அ.துரைசிங்கம் அவர்களின் வழிப் படுத்தலில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் என்ற பாடசாலைச் சமூ கத்தின் ஒன்றிணைந்த பங்களிப்பும் கடு மையான முயற்சியுமே மூல காரணம் எனலாம்.



நாட்டிய நாடகம்...

இதனை உறுதிசெய்வதாக பிரதம விருந்தினர் பேராசிரியர் எஸ்.சிவ லிங்கராஜா சிறப்பு விருந்தினர்கள் கலா நிதி செ.திருநாவுக்கரசு, திருமதி மீரா அருள் நேசன், கே.வி.குணசேகரம் ஆகியோரின் உரைகள் அமைந்திருந்தன.தனித்துவம் மிக்க தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து

**விதுரன்**

கொண்ட தனால் பெரு மகிழ் வடைகிறேன் என்ற பேராசிரியரின் தகை சார் உரையும், மாணவிகளின் உன்ன தமான ஆளுமையின் வெளிப்பாடு என கலாநிதி செ.திருநாவுக்கரசின் வர்ணனையும், இப்படியோர் நிகழ்வைக் கண்டதில்லை என்ற திருமதி மீரா,திரு கே.வி. குணசேகரம் ஆகியோரின் புகழாரமும் நிகழ்வின் சிறப்பை சிறப்பிப்பதாக அமைந்தன.

# மிரட்டும் இன்சமாம் உருவம்; தொடரும் வோர்னின் விமர்சனம்



(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தனது 'ஷேன்வோர்ன்ஸ் செஞ்சரி' புத்தகத்தில் உலகின் முன்னணி கிரிக்கெட் வீரர்களைப்பற்றி ருசிகரமான தகவல்களை வெளியிட்டுள்ளார். பாகிஸ்தான் அணியின்முன்னாள் தலைவர் இன்சமாமின் குண்டான உருவத்தை விமர்சித்து உள்ளார். [சுழ]ல் ஜாம்பவான் ஷேன் வோர்ன், 'ஷேன் வோர்ன்ஸ் செஞ்சரி' என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்.

இப்புத்தகத்தில் உலகின் சிறந்த 100 கிரிக்கெட் வீரர்களின் பட்டியலை வெளி யிட்டுள்ளார். அத்துடன் அவர்களின் பலம், பலவீனங்களை விமர்சித்துள்ளார். இப்பட்டியலின் முதலிடத்தில் சச்சின் உள்ளார். 90 ஆவது இடம்பிடித்துள்ள பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் மிகவும் குண்டான உருவம் கொண்டவர் என்று கூறியுள்ளார் வோர்ன்.

இன்சமாம் குறித்து வோர்ன் எழுதியுள்ளதாவது, உருவத்தில் பெரிய தோற்றமுடைய இன்சமாம் துடுப்பைப் பிடித்துக் கொண்டிருப்பது, ஏதோ பல்குத்தும் குச்சியை கையில் பிடித்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றும். அவருக் குப் பின் இருக்கும் ஸ்ரொம்புகள் சிறிய உருவமாக காட்சியளிக்கும். அவருக்குப் பின்னால் இருக்கும் எதுவுமே தெரியாது. இன்சமாமை முதன் முதல் பார்க்கும் போது அவர் மீது நல்ல எண்ணம் தோன்றாது. ஆனால் உலக அரங்கில் இன்சமாம் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்பதில் சந்தேகமில்லை. தவிர, களத்தடுப்பு செய்வ திலும் அவர் வல்லவர். மைதானத்திற்கு வெளியே இன்சமாம் பொதுவாக அமைதியாகப் பேசும் தன்மை கொண்டவர்.

ஆனால் தனக்கு நெருக்கமாக இருக்கும் ஒரு சிலரிடம் மட்டும் ரிலாக்சாக பேசி மகிழ்வார்.

### பாதுகாப்பு அரண்

பொதுவாக இந்திய மக்கள் தங்கள் கிரிக்கெட் ஹீரோக்களை பட்டப்பெயர் வைத்துத் தான் அழைப்பர். இந்த வகையில் டிராவிட்டுக்கு 'இந்திய பெரும் சுவர்' என்ற பெயர் சரியாகப் பொருந்தும்.

போட்டியின் போது நிலைத்து நின்று ஆடி அணியை காக்கும் திறன் படைத்தவர் டிராவிட்.

### தலைசிறந்த வீரர் லாரா

மேற்கிந்தியத் தீவுகள் ஜாம்பவான் லாராவின் ஆட்டத்தைப் பார்த்து நான் வியந்து இருக்கிறேன். சச்சின், லாரா இருவருமே தலைசிறந்த வீரர்கள். சச்சின்உறுதியுடன் ஆடக்கூடியவர். லாரா எண்ணம் போல விளையாடக்கூடியவர். இயல்பாகவே திறமைபடைத்த லாரா, அனைவரது கவனத்தையும் தனது ஆட்டத்தால் திசைதிருப்பி விடுவார். களத்தடுப்பிலும் அசத்தக்கூடியவர்.

### சம்பியன் மெக்ராத்

தனது எளிமை மற்றும் இயல்பான திறமையால் கிரிக்கெட் அரங்கில் தனி முத்திரை பதித்தவர் மெக்ராத். இவரது திறமைக்கு இவரது சாதனைகளே உதாரணம். ஆடுகளத்தில் போராட்டக் குணம் கொண்ட மெக்ராத் உண்மையான சம்பியன்.

### இறப்பர் மனிதர்

எப்போதும் சிரித்துக்கொண்டிருக்கும் தென்னாபிரிக்காவின் ஜோன்டி ரோட்ஸ், களத்தடுப்பு செய்வதில் கைதேர்ந்தவர். டைவ் அடித்து பிடி எடுக்கும் திறமைபெற்றவர். இவ்வாறு வோர்ன் தனது புத்தகத்தில் எழுதியுள்ளார். (5)

# இந்தியா வருவது குறித்து இங்கிலாந்து 8ஆம் திகதி முடிவு

## டெஸ்ட் அணியில் மீண்டும் யுவராஜ்

இங்கிலாந்துக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் இந்திய கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய டெஸ்ட் அணியில் யுவராஜ் சிங் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். அதேசமயம் வேகப்பந்து வீச்சாளர் ஆர்.பி.சிங் நீக்கப்பட்டுள்ளார். தமிழகத்தைச்சேர்ந்த எம்.விஜய், எஸ்.பத்திரிநாத் ஆகியோரும் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

அணி விபரம்; தோனி (அணித்தலைவர்), சேவாக், காம்பீர், டிராவிட், டெண்டுல்கர், லக்ஸ்மன், யுவராஜ் சிங், எம்.விஜய், எஸ்.பத்திரிநாத், ஹர்பஜன்சிங், சகீர் கான், இசாந்த் சர்மா, அமித் மிஸ்ரா, முனாப் பட்டேல், பிரக்ஜன்ஓயா.

இதே வேளை பீற்றர்சன் தலைமை யிலான இங்கிலாந்து அணி இன்று அபுதாபி செல்கிறது. இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கு இந்தியாவில் டெஸ்ட் போட்டிகள் நடைபெறும் சென்னை, மொகாலி மைதானங்களின் பாதுகாப்பு ஆய்வு தொடர்பான அறிக்கை நாளை மறுதினம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இவ் அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து எதிர்வரும் 8-ம் திகதி இங்கிலாந்து அணி இந்தியா வருவது பற்றி முடிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## காமன் வெல்த் போட்டியில் மாற்றம் இல்லை

2010 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி டில்லியில் நடக்கிறது. மும்பைத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து இந்தப் போட்டி வேறு நாட்டுக்கு மாற்றப்படலாம் என்று செய்தி வெளியானது. இதனை காமன் வெல்த் பெடரேஷன் தலைவர் மைக்கல் பென்னெல் மறுத்துள்ளார். காமன் வெல்த் போட்டியை டில்லியிலிருந்து மாற்றும்படி எந்த வித ஆலோசனையையும் செய்யவில்லை. பாதுகாப்பு ஏற்பாடுகளை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் என்று அவர்கூறியுள்ளார்.

## இம்ரான்கான் எச்சரிக்கை

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான்கான் அளித்த பேட்டியில், தீவிரவாதிகளின் தாக்குதல் பட்டியலில் அதிகம் இருப்பவர்கள் இங்கிலாந்துகாரர்கள் தான். எனவே மும்பை தாக்குதல் நடந்துள்ள நிலையில் இங்கிலாந்து வீரர்கள் இந்தியா சென்று விளையாடுவது குறித்து எச்சரிக்கையுடன் முடிவு செய்ய வேண்டும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ஆசிய கிரிக்கெட் குழுக்கூட்டம்

ஆசிய கிரிக்கெட் குழுக்கூட்டம் கொழும்பில் இன்று நடக்கிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கிரிக்கெட் சபை நிர்வாகிகள் கலந்துகொள்கிறார்கள். மும்பை தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து கிரிக்கெட் போட்டிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் 2011 ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டி ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்படும் என்று தெரிகிறது.

## ஐ.சி.சி.தலைவர் வேண்டுகோள்

ஐ.சி.சி.தலைவர் டேவிட் மொர்கான் அளித்துள்ள ஒரு பேட்டியில், 'இங்கிலாந்து அணி மீண்டும் இந்தியா சென்று விளையாட முன்னாள் வீரர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது தேவையற்றது. இங்கிலாந்து அணி தனது பயணத்தை இரத்து செய்யக்கூடாது. உலக கிரிக்கெட்டுக்கு இந்தியாவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்' என்று தெரிவித்துள்ளார். (5)

# முதல் 15 வீரர்களுள் குலசேகர முன்னேற்றம்

சிம்பாவேயுடனான ஒருநாள் தொடரில் சிறப்பாக செயல்பட்ட இலங்கைஅணியின் வேகப்பந்துவீச்சாளர் நுவான் குலசேகர சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் தரவரிசையில் முதல் 15 இடங்களுக்குள் முன்னேறினார்.

சிம்பாவேயுடனான 5போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் மொத்தம் 6விக்கெற்றுக்களை வீழ்த்திய குலசேகர ஐ.சி.சி. வெளியிட்ட புதிய தர வரிசையின்படி 11 இடங்கள் முன்னேற்றம் கண்டு 14ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

ஒருநாள் தரவரிசையில் குலசேகர முதல் 15இடங்களுக்குள் முன்னேறும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

அதேபோன்று சிம்பாப்வேயுடனான ஒரு நாள் தொடரில் மொத்தமாக 15 விக்கெட்டுக்களை வீழ்த்தி தொடர் நாயகன் விருதை வென்ற அஜந்த மெண்டிஸ் தரவரிசையில் அதிரடியாக 19 இடங்கள் முன்னேற்றம் கண்டு 25ஆவது இடத்தை பிடித்தார்.

மறுபுறத்தில் தொடரில் மொத்தமாக 11 விக்கெட்டுக்களை பதம் பார்த்த முத்தையா முரளிதரன் மீண்டும் முதல் 5 இடங்க ளுக்குள் முன்னேறினார். தரவரிசையில் 6ஆவது இடத்தில் இருந்த அவர் தற்போது 3இடங்கள் முன்னேறி மூன்றாவது இடத்தை பிடித்தார்.

ஐ.சி.சி. ஒருநாள் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் நெதன் பிரக்கன் தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளதோடு நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்ட்டோரி இரண்டாவது இடத்தில் காணப்படுகின்றார்.

இதனிடையே ஐ.சி.சி. ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இலங்கை



அணியின் உபதலைவர் குமார் சங்ககார ஒரு இடம் முன்னேறி 15ஆவது இடத்தைப் பிடித்தார்.

சங்ககார சிம்பாப்வேயுடனான ஒருநாள் தொடரில் அதிகபட்சமாக 182 ஓட்டங்களைக் குவித்தார்.

ஐ.சி.சி. துடுப்பாட்டவீரர்களுக்கான ஒரு நாள் தரவரிசையில் மஹேந்திர சிங் தோனி முதலிடத்தை ஆக்கிரமித்துள்ளதோடு மைக்கல் ஹஸி இரண்டாவது இடத்தில் உள்ளார். (5)

# பொன்டிங் விரைவில் ஓய்வு?

(மெல்போர்ன்)

வலதுகை மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங் விரைவில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறும் சூழல் உருவாகியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் அவுஸ்திரேலிய அணியின் பிசியோதெரபிஸ்ட் அலெக்ஸ் கவுண்டிரிஸ் இதை மறுத்துள்ளார். எதிர்வரும் 17ஆம் திகதி தென்னாபிரிக்க அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3டெஸ்ட் போட்டிகளில் விளையாட இருக்கிறது. இந்தியாவிடம் டெஸ்ட் தொடரை இழந்த அவுஸ்திரேலியா முதலிடத்தை தக்கவைத்துக் கொள்ள தென்னாபிரிக்காவை வீழ்த்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. இந்நிலையில் வலது கை மணிக்கட்டில் வலி ஏற்பட்டதையடுத்து அணித்தலைவர் பொன்டிங் தனக்கு சத்திரசிகிச்சை செய்த டாக்டர் கிரெக் ஹோயை சந்தித்தார். இவருக்கு சுமார் 10 வாரம் வரை ஓய்வு தேவைப்படுவதாகவும் மீண்டும் காயமடைந்தால் பெரும் பின்னடைவு ஏற்படும் என்றும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவுஸ்திரேலியாவின் விளையாட்டு வீரர்களுக்கான டாக்டர் பீற்றர் லார்கின்ஸ் அளித்தபேட்டியில், கடந்த யூன் மாதம் பொன்டிங் மணிக்கட்டு எலும்பு மற்றும் தசைநார் மறுசீரமைப்பு சத்திரசிகிச்சை செய்து கொண்டார். இதுமுடிந்தவுடனே அவரை நன்கு ஓய்வு எடுக்கச் சொன்னோம். ஆனால், அவர் தொடர்ந்து போட்டிகளில் விளையாடுவதிலே அதிக கவனத்துடன் இருந்துவிட்டார். தற்போது மணிக்கட்டு வலி பூரணமாகக் குணமடைய பொன்டிங்கிற்கு சுமார் 8 முதல் 10 வாரம் வரை ஓய்வு தேவைப்படுகிறது. இல்லையென்றால் அவரது கிரிக்கெட் வாழ்க்கைக்கு பாதிப்புஏற்



படும். அவரால் முழு உடற் தகுதியுடன் துடுப்பாட்டம் செய்ய முடியாமல் போய்விடும். மணிக்கட்டு வலி அதிகரித்தால் அவரால் ஓட்டங்கள் சேர்ப்பது கடினமாகிவிடும். இதன்பின்னர் மீண்டும் எலும்பு அல்லது தசைநாரில் காயம் ஏற்பட்டால், பிரச்சினை மிகப்பெரிதாகிவிடும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஆனால், பொன் டிங்கிற்கு எந்த சிக்கலும் இல்லை என அவுஸ் திரேலிய அணியின் பிசியோதெரபிஸ்ட் அலெக்ஸ் கவுன்டுரிஸ் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், பொன்டிங்கிற்கு வலி ஏற்பட்டுள்ளது உண்மை தான். சாதாரணமாக சத்திரசிகிச்சை செய்து கொண்டவர்கள் அனைவருக்கும் வலி இருக்கத்தான் செய்யும். காயம் அதிகம் இருந்தால் அவரால் எப்படி பயிற்சி மேற்கொள்ள முடியும் என்றார். (5)

## இலங்கைத் தமிழர்...

பேட்டியின் போது அவர் இதனைத் தெரிவித் தார். அதன் விபரம் வருமாறு,

***கேள்வி:-*** இலங்கைத் தமிழர் பிரச்சி னைக்காக பிரதமரிடம் மனு அளித்திருக் கிறீர்கள். என்ன முடிபெடுக்கப்பட்டுள்ளது?

*பதில்:-* அனைத்துக் கட்சிகளின் சார்பில் மனுவினைத் தந்த பிறகு அதனை வலியு றுத்தி நானும்அனைத்துக் கட்சித் தலைவர் களில் பலரும் தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டோம்.

இலங்கையில் உடனடியாக போர் நிறுத் தம் செய்யப்படவேண்டும் என்பதை பல கட்சி களின் தலைவர்கள் பிரதமரிடத்தில் வலியு றுத்திப் பேசினார்கள். அவற்றுக்கெல்லாம் பிரதமரும் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் அவர்களும் விளக்கமளித்தனர்.

இறுதியாக நான் அனைவர் சார்பிலும் பிரதமரிடத்தில் ஒரு வேண்டுகோளை விடுத் தேன்.

இலங்கையின் நிலைமைகள் சீர்படுவ தைப் பற்றி கவனிக்கவும், போரை நிறுத்து வது பற்றி வலியுறுத்துவதற்காகவும் அமை திப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யவும் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களை இலங்கைக்கு நேரில் அனுப்பி வைக்க வேண்டுமென்று பிரதமர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண் டேன் அதனை ஏற்று வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கை க்கு அனுப்பி வைக்க பிரதமர் ஒப்புக் கொண் டார்.

பிரணாப் எப்போது இலங்கைக்கு செல் வார் என்று நான் மீண்டும் குறுக்கிட்டுக் கேட்டபோது எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அவர் இலங்கைக்குச் செல்வார் என்று பிரதமர் உறுதியளித் திருக் கிறார்.

***கேள்வி:-*** காங்கிரஸ் கட்சியின் தலைவ ரும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் வழி காட்டும் தலைவருமான சோனியா காந் தியைச் சந்தித்தீர்களா?

*பதில்:-* அவர்களையும் சந்தித்தேன். என்னுடன் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு வும், என் மகள் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியும் வந்திருந்தனர்.

சோனியா காந்தி அவர்களிடம், பிரதமரி டம் அளித்த இலங்கைத் தமிழர்களுக்காக பிரச்சினை குறித்த மனுவின் நகலைக் கொடுத்தேன்.

பிரதமரிடம் பேசிய விபரங்களை குறித்து விளக்கியதோடு, சோனியா காந்தியையும் அதிலே கவலையெடுத்து ஆவன செய்யவேண் டும் என்று கேட்டுக் கொண்டேன்.

***கேள்வி:-*** பிரணாப் முகர்ஜி அவர்கள் இலங்கைக்குச் செல்வதால் நிலைமை சாதகமாக இருக்கும் என்று நம்புகிறீர்களா?

*பதில்:-* நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

***செய்தியாளர்:-*** சாதகமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

*பதில்:-* அதுதான் எனது பதிலும். சாதக மாக இருக்கவேண்டும் என்று விரும்புகி றோம். நல்ல உள்ளங்களில் இருந்து வரு கின்ற பதில் அதுவாகத்தான் இருக்கும்.

***கேள்வி:-*** இலங்கை அரசுக்கு ஆயுத உதவி செய்யக் கூடாது என்று ஏற்கனவே அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பேசப்பட்டதே?

*பதில்:-* அதைப் பற்றி அப்போதும் சொல்லியிருக்கிறேன். இப்போதும் பேசியிருக் கிறேன். அவ்வாறு ஆயுத உதவி செய்யவில் லை என்று சொல்கிறேன்.

***கேள்வி:-*** பிரணாப் முகர்ஜி சொல்லும் போது தமிழ் பிரதிநிதிகளும் இடம்பெறவேண் டுமென்ற கோரிக்கை வைக்கப்படுமா?

*பதில்:-* அவர்கள் இலங்கைக்கு செல்ல ஒப்புக் கொண்டு விட்டார்கள். போகும்போது என்னென்ன செய்யவேண்டும் என்ற விபரங்களை பற்றி பின்னர் தொடர்பு கொண்டு பேசுவார்கள்.

***கேள்வி:-*** அ.தி.மு.க, ம.தி.மு.க.,தே.மு. தி.க.,பா.ஜ.க. போன்ற கட்சிகள் இந்தக் கூட்டத்திற்கு வரவில்லையே?

*பதில்:-* இது அவர்களுடைய உணர் வைக் காட்டுகிறது.

***கேள்வி:-*** இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ டில்லி வந்தபோது போர் நிறுத் தத்துக்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லி யிருக்கிறாரே?

*பதில்:-* வாய்ப்பு ஏற்படும் என்று எதிர் பார்க்கிறேன்.

***கேள்வி:-*** இலங்கைப் பிரச்சினையில் சில அதிகாரிகள்தான் தவறு செய்கிறார்கள் என்றும் குறிப்பாக அந்தத் துறையின் செய லாளர் சிவசங்கர்மேனன் , எம்.கே.நாரா யணன் போன்றவர்கள்தான் முக்கிய கார ணம் என்று வெளிப்படையாகச் சொல்லப் படுகிறதே?

*பதில்:-* அவ்வாறு பேசப்பட்டால் அதற்கு பிரதமர் உரிய நடவடிக்கை எடுப்பார் என்று நம்புவோமாக என்றார் அவர். (ச-5)

# போரை நிறுத்துமாறு ஐ.தே.க. வேண்டுகோள் விடுக்காதாம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் நடத்தி வரும் போரை நிறுத்துமாறு ஐக்கிய தேசிய கட்சி வேண்டுகோள் விடுக்காது என்று கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்க ளான லக்ஸமன் செனவினரட்ன, லக்ஸ்மன் கிரியல்ல ஆகியோர் தெரி வித்துள்ளனர்.

அவசர காலச் சட்ட மூலத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொ டர்பான விவாதத்தில் உரையாற்றிய போது லக்ஸ்மன் செனவிரட்னவும் லக்ஸ்மன் கிரி யல்லவும் இவ்வாறு தெரிவித்தனர்.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை காலை9.30 மணிக்கு சபாநாயகர் வி.ஜே. மு.லொக்குபண்டார தலைமையில்கூடியது. வழமையான நாட்பணிகள் முடிபடைந்ததும் இந்த விவாதங்கள் இடம்பெற்றன.

அதில் உரையாற்றிய லக்ஸ்மன் கிரியல்ல, பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு ஐ.தே.க.ஆதரவு வழங்கும் என்று கூறினார்.

அத்துடன் பயங்கர்வாதிகளை அழிப்ப தற்கான போரை தொடர வேண்டும் எனவும் அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

இங்கு உரையாற்றிய லக்ஸ்மன் செனவி ரட்ன, போரை நடத்துங்கள் பயங்கரவாதத் தை ஒழியுங்கள்.

அதற்கு ஆதரவு தருகிறோம் என்று கூறி யதுடன் படையினரின் வெற்றியை குறை த்து மதிப்பிடவில்லை எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, அரசியல் தீர்வு குறித்தும் அரசாங்கம் சிந்திக்கவேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார். (ச)

## போர் நிறுத்தத்துக்கு...

விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்று கையில் மேலும் கூறியதாவது, பயங்கரவா தம் இன்று எம்மிடம் சிக்கியுள்ளது.

இந்த தருணத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு அதனை அழிக்க வேண்டும். 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் இதனு டன் தொடர்புபட்டதல்ல என்பதனால் பயங் கரவாதத்தை அழித்ததன் பின்னர் சகலரும் ஒன்றிணைந்து அதுபற்றி பேசு வோம்.

பயங்கரவாதத்திற்கு எதிராக வெற்றிமீது வெற்றியை பெற்றுக்கொண்டிருக்கின்ற நிலை யில் சகலரும் கை கொடுக்கவேண்டும். பயங் கரவாதம் மனிதத் தன்மைக்கு பெரும் பிரச்சி னையாக இருக்கிறது.

பாரதூரமான பிரச்சினைக்கு மத்தியில் நாம் முன்னெடுக்கும் இந்த நடவடிக்கை பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை விடுவிப் பதே ஆகும் என்பதினால் போர் நிறுத்தத்திற் குள் நாம் சிக்கி கொள்ளமாட்டோம். அதற்கு நாம் தயார் இல்லை.சவால்களுக்கு மத்தியில் எமது நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இராணுவ நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பதை நாம் தீர்மானிப் பது இல்லை.அதற்கான தீர்மானத்தை அந் தந்த துறையில் இருப்பவர்களே முன்னெ டுப்பார்கள்.

நாம் அவர்களுக்கு தேவையான உதவி களைச் செய்து வருகிறோம். நிதியை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதற்காகவே கூடுதலான நிதி ஒதுக்கப்பட் டது. இதற்கு ஐ.தே.க ஆதரவு அளித்தமை யையிட்டு வரவேற்கின்றோம் என்றார். (ச-5)

## இந்தியப் பிரதமரை...

பதிலளித்த அமைச்சர் மைத்திரிபால சிறி சேன பயங்கரவாதத்துக்கு எதிரான போரை நிறுத்துமாறு இந்திய அரசாங்கம் ஒருபோதும் வேண்டுகோள் விடுக்காது என்றும் கூறினார்.

அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் குறித்து இந்திய மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியுள்ள தாக தெரிவித்த அமைச்சர் மைத்திரிபால சிறி சேன அனைத்துக் கட்சி ஆலோசனைக் குழு வின் மூலமாக இன நெருக்கடிக்கான தீர்வு கள் முன்வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தற்போது பலவீனம டைந்து வருகின்றனர்.

இந் நிலையில் போரை அரசாங்கம் நிறுத் தாது. ஆயுதங்களை கீழே வைத்து விட்டு பேச்சுக்கு வருவதுதான் புலிகளுக்கு இருக் கக் கூடிய ஒரே ஒருவழி என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## வங்கக் கடலில்...

இந்தோனேசியாவுக்கும் வடமேற்குப் பகுதி யில் அந்தமானுக்கும் இலங்கைக்கும் நடுவே குறைந்த காற்றமுத்த தாழ்வுநிலை உருவா கியுள்ளது. அது வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து வருகிறது.

நாளை அது சென்னைக்கு அருகே வந்துவிடும். அப்போது சென்னையில் மழை பெய்யும். ஞாயிற்றுக்கிழமை சென்னைக்கு மிக அருகில் வரும் அப்போது பலத்த மழைக்கு வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை நிலையம் தெரிவித்தது. (ச-35)

## ஆயுதங்களைக் கைவிட....

தமிழகத்தின் அனைத்துக் கட்சி நாடா ளுமன்ற குழுவினர் இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங்கை சந்தித்து இலங்கை போர் நிறுத்தம் ஒன்றுக்குச் செல்வதற்கான அழுத் தத்தை வழங்கவேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்ட வாறு கூறினார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் ஏற்கனவே வன்னி யை விட்டு வெளியேறியிருப்பதாகத் தமக்கு நம்பகரமான தகவல்கள் கிடைத்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் அமைச் சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வன்னியை அரசாங்கப் படைகள் மீட்டு வரும் நிலையில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் வெளியேறி இருப்ப துடன் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் தப்பி விடுவார் என தாம் நம்பு வதாகவும் அமைச்சர் கூறினார்.

பிரபாகரன் தப்பி ஓடியிருப்பார். அரசாங் கப் படைகளிடம் அகப்படாமல் தப்புவதற்காக அவர் ஏற்கனவே வன்னியை விட்டு வெளி யேறியிருப்பார் என அமைச்சர் தெரிவித்தார் (ச-5)

## போர் நிறுத்தத்தை....

இந்தியப் பிரதமரை சந்திப்பதற்காக நேற் றுக் காலை 10 மணியளவில் தமிழக அனைத் துக் கட்சித் தலைவர்கள் டில்லி தமிழ்நாடு இல் லத்தில் இருந்து தனி பஸ்ஸில் பிரதமர் அலு வலகம் சென்றனர்.

அங்கு 10.15 மணியளவில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பிரதமரைச் சந்தித்தனர்.

அப்போது இலங்கைத் தமிழர்கள் படும் துன்பம் குறித்தும், இலங்கை இராணுவத் தாக்குதல்களால் அப்பாவித் தமிழர்கள் கொல் லப்படுவது பற்றியும் இலங்கை போரை நிறுத்த உடனே நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசி யம் குறித்தும் பிரதமரிடம் விளக்கமாக எடுத் துக் கூறப்பட்டது.

இலங்கை பிரச்சினை மற்றும் தமிழகத் தின் தேவை குறித்தும் மனுக் கொடுக்கப்பட் டது.

இந்த சந்திப்பின்போது மத்திய மந்திரி பிரணாப் முகர்ஜி, தேசிய பாதுகாப்பு ஆலோ சகர் எம்.கே.நாராயணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

இலங்கைத் தமிழர் சந்திக்கும் அவல நிலை குறித்து முதலமைச்சர் கரு ணாநிதியும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் பிரதமர் மன் மோகன் சிங்கிடம் முறையிட்டதைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினையில் இந்தியா உறுதியான நடவடிக்கை மேற் கொள்ளும் என்று பிரதமர் உறுதிய ளித்தார்.

இந்திய மீனவர்களுக்கு எதிராக இலங்கை கடற்படை நடத்தும் தாக்கு தல் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இந்தியா தீவிர நடவடிக் கை எடுக்கும் என்றும் தமிழக அனைத் துக் கட்சிக்குழுவிடம் பிரதமர் மன் மோகன் சிங் உறுதியளித்தார்.

மேலும் இலங்கைப் பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற் காக விரைவில் தமது தூதுவராக வெளியுறவு மந்திரி பிரணாப் முகர்ஜி இலங்கைக்குச் சென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போரை நிறுத்த நேரில் நிர்ப்பந்திப்பார் என்றும் பிரதமர் மன்மோகன் சிங் தமிழக அனைத்துக் கட்சித் தலைவர்க ளிடம் உறுதியளித்துள்ளார். (ச-5)


21ஆவது வருட கல்விச் சேவையில்...

கல்வியாண்டு - 2009

தரம் 1 முதல் O/L வரையான

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

07.12.2008 ஞாயிறு 10.00 மணி

✦ எமது தனித்துவமான ஆசிரியர் குழு.

✦ புதிய அனுமதிகளை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

உயர் கல்விக்கு வழிகாட்டும் ஒரே நிறுவனம்

நாவலர்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C-1822)

MATHS CENTRE

M.M.V Road Nelliyady

கல்வியாண்டு - 2009

எமது வழமையான ஆசிரியர்களுடன் சில புதிய ஆசிரியர்களும் இணைகின்றார்கள்

தரம்:- 6, 7, 8, 9, 10, 11

ஆரம்பம் :- 06.12.2008

சனிக்கிழமை பி.ப .3.30 மணி (C-1821)

உடன் தேவை

ஒப் செற் இயந்திர இயக்குநர்கள், பயிலுநர்கள் தேவை (இரவுக்கடமை)

பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் நேரில் வரவும்.

-நிர்வாக உத்தியோகத்தர்

வலம்புரி,

இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Invitation

UDUVIL GIRLS' COLLEGE

Presents

"Light of the World"

A festive Christmas celebration in song

on

Friday 5th December, 2008, 3.30 p.m

Principal, Staff and Students

(C-1820)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.